# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/= இதழ் - 14 16.04.2023




இயற்கையின் அவசரச் செய்தி 09



பணத்தை நிர்வகிக்க தெரிந்து கொள்ளுங்கள் 16



கோடை காலம் கோழிகளின் சோதனை ... 20

# மஞ்சள் பயிரிடுவதனால் இலாபம் கிடைக்குமா?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# மஞ்சள் பயிரிடுவதனால் இலாபம் கிடைக்குமா?

கொரோனாக் காலத்திற்கு முன்பு இலங்கையில் மஞ்சள் செய்கை மிக பரவலாகக் காணப்பட இல்லை. ஆயினும் இலங்கை மஞ்சள் பயிரிடுவதற்கான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. பொருத்தமான நிலம் இல்லாதது, போதிய நீர்ப்பாசன வசதிகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தை வாய்ப்புகள் போன்ற பல்வேறு காரணிகளால் உற்பத்தி அளவு ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது.

எவ்வாறாயினும், சமீப வருடங்களில் சர்வதேசச் சந்தைகளில் மஞ்சளுக்கான அதிகரித்து வரும் தேவை மற்றும் மஞ்சளின் ஆரோக்கிய நன்மைகள் பற்றிய அதிகரித்துவரும் விழிப்புணர்வின் காரணமாக இலங்கையில் மஞ்சள் செய்கையில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இது நாட்டில் குறிப்பாக வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மஞ்சள் பயிர்ச்செய்கையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் அறிக்கையின் படி இலங்கை 2019 இல் 789 மெட்ரிக் தொன் மஞ்சளை ஏற்றுமதி செய்து 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் அந்நியச் செலாவணியை ஈட்டியது.

எவ்வாறாயினும் கொரோனாத் தொற்று நோய்களின்போது இலங்கையில் மஞ்சள் செய்கையில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. ஏனெனில் மக்கள் மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளது என்று நம்பினார்கள். மேலும் தொற்றுநோய்களின் போது உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக மஞ்சள் செய்கையை அதிகரிக்க விவசாயிகளை அரசாங்கம் ஊக்குவித்துள்ளது. மஞ்சள் மற்றும் பிற பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு அரசாங்கம் மானியங்கள் மற்றும் பிற வகையான ஆதரவை வழங்கியது இது நாட்டில் மஞ்சள் உற்பத்தியை அதிகரிக்க உதவியது.



> சமீப வருடங்களில் சர்வதேச சந்தைகளில் மஞ்சளுக்கான அதிகரித்து வரும் தேவை மற்றும் மஞ்சளின் ஆரோக்கிய நன்மைகள் பற்றிய அதிகரித்துவரும் விழிப்புணர்வின் காரணமாக இலங்கையில் மஞ்சள் செய்கையில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும் சந்தையில் அதிகளவில் மஞ்சள் விநியோகம் அதனால் மஞ்சள் விலையில் ஏற்பட்ட சரிவு இலங்கையில் மஞ்சள் செய்கைக்கு மிகவும் நிலையான மற்றும் சந்தை சார்ந்த அணுகுமுறையின் அவசியத்தை எடுத்துக்காட்டியது.

### மஞ்சள் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையில் மஞ்சள் பயிரிடுபவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் உள்ளன. இது கடந்த காலங்களில் சந்தர்ப்பங்களில் மஞ்சள் செய்கையின் தோல்விக்குப் பங்களித்திருக்கலாம்.

மஞ்சள் செடிகள் பல்வேறு பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு ஆளாகின்றன.



அதாவது வேர்த்தண்டுக்கிழங்கு அழுகல் இலைப்புள்ளி மற்றும் நூற்புழுக்கள் போன்றவை பயிர்களுக்குக் குறிப்பிடத் தக்க சேதத்தை ஏற்படுத்தும்.

### காலநிலை மாறுபாடு

மஞ்சள் செய்கைக்கு ஒரு குறிப்பிட்ட தட்பவெப்ப நிலை தேவைப்படுகிறது மேலும் மழைப் பொழிவு முறைகளில் ஏற் படும் மாற்றங்கள் அல்லது வெப்பநிலை ஏற்ற இறக்கங்கள் போன்ற வானிலை மாறுபாடுகள் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சலை மோசமாக பாதிக்கும். இலங்கையில் சிறிய அளவிலான விவ சாயிகள் பொதுவாக பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி மஞ்சளைப் பயிரிடுகின்ற னர். இது நவீன தொழில் நுட்பங்களைப் போல திறமையானதாக இருக்காது. கூடு தலாக போதுமான சேமிப்பு வசதிகள் அல்லது சந்தைகளுக்கு அணுகல் போன்ற உள்கட்டமைப்பு பற்றாக் குறை போன்றன மஞ்சளின் இலாபத்தை குறைக்கும்.

### இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சளோடு போட்டி

இலங்கை இறக்குமதி செய்யப்படும் மஞ்சளோடு கடுமையான போட்டியை எதிர்கொள்கிறது. இது பெரும்பாலும் உள்நாட்டில் விளையும் மஞ்சளை விட மலிவானது. இது இலங்கை விவசாயிக ளுக்குத் தமது உற்பத்திப் பொருட்களை போட்டி விலையில் விற்பனை செய்வதை சவாலாக மாற்றும்.

எது எவ்வாறாயினும் நீண்ட காலமாக மஞ்சள் துறையில் ஈடுபட்டு வெற்றியடைந் துள்ள தொழிற்சாலைகளும் உள்ளன.

Greenfield Spices (Pvt) Ltd. இந்த நிறுவனம் இலங்கையின் மிகப் பெரிய மசாலா ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகும், மேலும் இது மாத்தளையில் மஞ்சள் பதப் படுத்தும் தொழிற்சாலையைக் கொண்டுள் ளது.

யூரோ ஏசியா கார்ப்பரேஷன் இந்த நிறுவனம் மாத்தளையில் மஞ்சள் பதப் படுத்தும் தொழிற்சாலையையும் கொண் டுள்ளது மற்றும் ஏற்றுமதிக்காக உயர்தர மஞ்சள் தூளை உற்பத்தி செய்கிறது.

அரோமா ஸ்பைசஸ் இண்டஸ்ட்ரீஸ் இந்த நிறுவனம் கண்டியை தளமாகக் கொண்டது. மற்றும் மஞ்சள் தூள் உட்பட பல மசாலா பொருட்களை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது.

Challenging International (Pvt) Ltd. குருநாகலைத் தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் மஞ்சள் பொடியை ஏற்றுமதி செய்வதற்கான மஞ்சள் பதப்படுத்தும் வசதியைக் கொண்டுள்ளது.

### சந்தைக்கு மஞ்சள் அதிகளவில் வருவது

சந்தையில் மஞ்சள் கொண்டு வரப்படுதல் அதிகமாக இருந்தால், வரத்து அதிகமாக இருப்பதால் பண்ணை விலை குறைய வாய்ப்புள்ளது. மஞ்சள் செய்கை அதிகரிக் கும் போது அல்லது பதப்படுத்தும் தொழிற் சாலைகளால் தற்போதுள்ள மஞ்சளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் போது இந்த நிலை ஏற்படும்.

### இறக்குமதியிலிருந்து போட்டி

இந்தியா மற்றும் சீனா போன்ற நாடு களில் இருந்து மலிவான மஞ்சள் இறக்கு மதியிலிருந்து இலங்கை கடுமையான போட்டியை எதிர்கொள்கிறது. இதன் விளை வாக, உள்ளூர் மஞ்சள் விவசாயிகள் மலிவான இறக்குமதியுடன் போட்டியிட தங்கள் உற்பத்திகளைக் குறைந்த விலை யில் விற்க வேண்டியிருக்கும்.

### தரச் சிக்கல்கள்

சில விவசாயிகள் உற்பத்தி செய்யும் மஞ்சளின் தரம், பதப்படுத்தும் தொழிற் சாலைகளுக்குத் தேவையான தரத்தை பூர்த்தி செய்யாமல் இருக்கலாம். தரம் குறைவாக இருந்தால், பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மஞ்சளை நிராகரிக்க லாம் அல்லது குறைந்த விலையை வழங் கலாம், இது பண்ணை விலையில் சரிவுக்கு வழிவகுக்கும்.

### பேரம் பேசும் சக்தி

இலங்கையில் உள்ள சிறிய அளவி லான மஞ்சள் விவசாயிகள் வாங்குவோர் அல்லது செயலிகளுடன் விலை பேசும் போது வலுவான பேரம் பேசும் சக்தியைக் கொண்டிருக்க மாட்டார்கள். இந்த சூழ் நிலையில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்குக் குறைந்த விலையை ஏற்கும் நிலை ஏற்படும்.

பல பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இருந்தபோதிலும், இலங்கையில் மஞ்சள் பண்ணை விலைகள் குறைவதற்கான சாத்தியமான காரணங்களில் இவை சில மட்டுமே. இலங்கையில் மஞ்சளின் தொழில் சிக்கலானது, மேலும் விவசாயிகள் கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்ட பல காரணிகளால் விலைகள் பாதிக்கப்படலாம்.

### பங்குதாரர்களுக்கிடையிலான ஒத்துழைப்பின் நிலை

இலங்கையில் மஞ்சள் செய்கையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட விவசாயிகள், அரச நிறுவனங்கள், மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுக்கு இடை வளங்கள் திறம்பட ஒதுக்கப்படுவதையும் முன்முயற்சிகள் திறம்பட செயல்படுத்தப் படுவதையும் உறுதிசெய்ய இந்தப் பங்கு தாரர்களிடையே பயனுள்ள ஒத்துழைப்பு அவசியம்.

### வளங்களின் இருப்பு

நிலம், நீர் போன்ற வளங்கள் மற்றும் விதைகள் மற்றும் உரங்கள் போன்ற இடுபொருட்களின் இருப்பு எந்த ஒரு மஞ் சள் செய்கையின் முயற்சியின் வெற்றிக் கும் முக்கியமானது. விவசாயிகள் தங்கள் மஞ்சள் செய்கையை விரிவுபடுத்தவும், அவர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் இந்த வளங்களை அணுகுவதை அரசாங் கம் உறுதி செய்ய வேண்டும்.

### சந்தை நிலவரங்கள்

மஞ்சளுக்கான தேவை மற்றும் விலை உள்ளிட்ட சந்தை நிலைமைகள் இலங் கையில் மஞ்சள் செய்கையை ஊக்குவிப் பதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு முயற்சியின் வெற்றியிலும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும். அரசாங்கமும் மற்ற பங்குதாரர்களும் சந்தை நிலைவரங்களைக் கருத்தில் கொண்டு சந்தை சார்ந்த உத்தி களை உருவாக்கி விவசாயிகளுக்கு நல்ல வருவாயை உருவாக்க வேண்டும்.

எனவேஇலங்கையில் மஞ்சள் பயிர்ச் செய்கையை ஆதரிப்பதற்காக நடைமுறைப் படுத்தப்படும் எந்தவொரு உத்திகளின் பய னும் பங்குதாரர்களுக்கிடையிலான ஒத்துழைப்பின் நிலை, வளங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் நடைமுறை யில் உள்ள சந்தை நிலைமைகளைப் பொறுத்தே அமையும்.

**https://www.agricultureinformation.lk/**

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0777 276 949

# கப்பல் சேவை

காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரியின் காரைக்காலுக்கும் இடையிலான கப்பல் சேவை இம்மாத இறுதியில் ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை ஒன்று இதன்மூலமாக நிறைவேற்றப்படுகின்றது. பொதுமக்களுடைய போக்குவரத்துக்கு மட்டுமன்றி, பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் கொண்டுவருவதற்கும் கூட, இந்தச் சேவை பயன்படுத்தப்படப்போகின்றது. இதனால் வடபகுதியின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்துவதாக இந்தச் சேவை அமையும். இதனை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலமாகவே இதனூடான முழுப்பலனையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடி உச்சத்திலிருந்த கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பெருமளவுக்கு நீக்கப்பட்டுவிட்டன. பொருளாதாரம் திறந்துவிடப்பட்டிருப்பதால், இந்தியாவிலிருந்து பல பொருட்கள் இலங்கைக்குத் தாரளமாக வருவதற்கான சூழல் இந்தக் கப்பல்சேவை மூலமாக உருவாகலாம். இது இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆக, எவ்வாறான பொருட்களை இறக்குமதி செய்வது என்பதில் தெளிவான வரையறை ஒன்று அவசியம். தற்போது எடுக்கப்பட்டுள்ளது போல முட்டைகளை இறக்குமதி செய்வது போன்ற முடிவுகள் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

காங்கேசன்துறை துறைமுகத்தைப் புதிய கப்பல் சேவைக்காக தயார்படுத்தும் வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பயணிகள், பொருட்களைக் கையாள்வது, சுங்கப்பகுதி, குடியகல்வு, குடிவரவுப் பகுதி என்பன புதிதாக அமைக்கப்படுகின்றன. அதேபோல காரைக்கால் இறங்குதுறையும் புதிய கப்பல் சேவைக்காக தயார்படுத்தப்பட்வேண்டிய நிலையில் உள்ளது. கப்பல் சேவைக்கான கட்டணம் விமான சேவையுடன் ஒப்பிடும்போது, குறைவானதாக இருப்பதும், நூறு கிலோ வரையிலான பொருட்களைக் கொண்டுசெல்லக்கூடியதாக இருப்பம், சாதாரண பயணிகளைக் கவரக்கூடியதாக இருக்கும் என்பது உண்மை.

அதேவேளையில் சிறிய அளவிலான ஏற்றுமதி – இறக்குமதிக்கும் இந்தக் கப்பல் சேவையைப் பயன்படுத்த முடியும். இதன்மூலம் வடபகுதிக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான நெருக்கம் அதிகரிக்கப்போகின்றது. வடபகுதியிலும், வர்த்தகம் உல்லாசப் பயணத்துறை என்பன இதன்மூலமாக விருத்தியடைவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. பலாலியிலிருந்தான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் தமிழகத்திலிருந்து சிறிய தொகையிலான உல்லாசப்பயணிகள் ஏற்கனவே வரத் தொடங்கியிருக்கின்றார்கள். இவ்வாறு வரக்கூடிய உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய கட்டமைப்புக்களை மேலும் பலப்படுத்த வேண்டிய தேவை வடபகுதியில் காணப்படுகின்றது.

அதேவேளையில் ஈழத் தமிழர்களின் பாரம்பரிய உணவுப் பொருட்களின் உற்பத்தியில் அண்மைக்காலத்தில் அதிகளவுக்கு கவனம் செலுத்தப்படுகின்றது. உள்ளூர் உற்பத்தியாளர்கள் இவற்றை சிறு கைத்தொழில் முயற்சிகள் மூலமாக உற்பத்தி செய்கின்றார்கள். இவற்றுக்கு எமது புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும், வெளிநாட்டவர்கள் மத்தியிலும் கணிசமான வரவேற்புள்ளது. கப்பல் சேவை ஆரம்பமாகவிருக்கும் நிலையில், இவற்றை ஏற்றுமதிப் பொருட்களாக மாற்றுவதில் கவனம் செலுத்துவது அவசியம். அதன்மூலம் அதிக அந்நியச் செலாவணியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு...




## தமிழகத்தில் சாதிக்கும் நம்மவர்

அகதியாகச் சென்று ஸ்பைருலினா உற்பத்தியில் சாதிக்கும் நம்மவர் என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளிவந்திருந்த க.இரத்தினராஜசிங்கம் குறித்த கட்டுரை படித்தேன். அவர் எம்மைப்போன்ற பலருக்கும் ஒரு முன்னோடியாக இருக்கின்றார். தமிழகத்திலிருந்துகொண்டு இங்குள்ள உறவுகளுக்கு உதவ அவர் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம். அதேவேளையில், இந்தக் கட்டுரையின் மூலமாகவே சுருள்பாசி குறித்தும் அதன் முக்கியத்துவத்தையிட்டும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது. இங்கு அதன் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். அதன்மூலம் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கலாம். சுருள்பாசிக்கான விதைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம். அதன் உற்பத்தியை எவ்வாறு முன்னெடுக்கலாம்? அதனை எவ்வாறு உணவாக எடுப்பது? அதிலிருந்து வரக்கூடிய பெறுமதி சேர் பொருட்களை எவ்வாறு செய்வது? இவை போன்ற விடயங்களில் தமிழர் பொருண்மியம் விரிவான விளக்கங்களைத் தந்தால் எம்மைப்போன்ற பலருக்கும் பயனுள்ளதாக இருக்கும். நன்றி!

**அந்தோனிதாஸ் - விடத்தல்தீவு, மன்னார்.**

## நன்னீர் மீன் உற்பத்தி

கடந்த வார தமிழர் பொருண்மியம் இதழில் நன்னீர் மீன் உற்பத்தி தொடர்பாக தமிழ்க்கவி எழுதியிருந்த கட்டுரை சிறப்பானதாகவும், சுவாரஸ்யமான பல தகவல்களைத் தருவதாகவும் இருந்தது. கிராம மட்டங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக்கும், அதனை ஓர் உள்ளூர்ப் பொருளாதாரமாக வளர்த்தெடுப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், அதற்கான முயற்சிகள் போதுமானதாக இல்லை. நன்னீர் மீன்கள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் காணப்படும் சில தவறான கருத்துக்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். இதனை மாற்றியமைப்பதிலும், உள்ளூர்ப் பொருளாதாரமாக இதனை மாற்றியமைப்பதிலும் தமிழர் பொருண்மியம் கணிசமான பங்களிப்பை வழங்க வேண்டும். இது போன்ற விழிப்புணர்வூட்டும் கட்டுரைகளை நீங்கள் தொடர்ந்து தர வேண்டும்.

**கவிதா முருகேசு - சிலாபம்**

## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

### சந்தாதாரராகுங்கள்!

- ⁎ **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
- ⁎ **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ------------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - -------------------------------------
**செலுத்திய திகதி** - --------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,67,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,82,400 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




## சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுமதி?

**கேள்வி -** இலங்கையிலிருந்து சீனா குரங்குகளை வாங்குவது பொருளாதார ரீதியாக நாட்டுக்கு வருமானம்தானே? அத்துடன் உள்நாட்டில் பயிர்கள் குரங்குகளால் பாரிய அளவில் அழிக்கப்படுவதையும் தடுக்கலாம். ஆனால் இதனை எதற்காக சர்ச்சையாக்குகின்றார்கள்?

பி. ஐங்கரன்,
திருகோணமலை.

**பதில் -** நீங்கள் குறிப்பிடும் இரண்டு விடயங்களும் உண்மைதான். இதன் மூலமாக அதிகளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் உண்மைதான். இன்றைய கால கட்டத்தில் அதற்கான தேவையும் உள்ளது. அதே வேளையில், இலங்கையில் பயிர்களை அழிப்பதில் கணிசமான பங்கு குரங்குகளுக்கு இருக்கின்றது. குரங்குகள் பெருவாரியாகப் பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்கான உபாயங்கள் இல்லாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், சீனாவின் உண்மையான நோக்கம் என்ன என்பதுதான் இன்று சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. சீனா மட்டுமல்ல வேறு சில நாடுகளும் இலங்கையிலிருந்து செங்குரங்குகளை வாங்குவதற்கு விரும்புகின்றன.

சீனா இலங்கையிடமிருந்து ஒரு லட்சம் குரங்குகளை கேட்டுள்ளது. இது முதல் கட்டம் தான். இதனைத் தொடர்ந்தும் மேலும் குரங்குகளை இலங்கையிலிருந்து கொள்வனவு செய்யும் திட்டமும் சீனாவுக்கு இருக்கின்றது.

தமது மிருகக் காட்சி சாலைகளுக்கு என்று கேட்டிருந்தாலும் இவ்வளவு எண்ணிக்கையையும் அத்தோடு தொடர்ச்சியாக வாங்க முன்வந்திருப்பதையும் பார்க்கும் போது சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

பலவகையான குரங்குகள் சீனாவிலும் உண்டு. 12 மிருகங்களை அடிப்படையாகக் கொண்ட சீன வருடங்களில் குரங்கும் ஒன்று. சீனர்கள் குரங்கு மாமிசம் சாப்பிடுவார்கள் என்பது இரகசியமானதல்ல. அவர்கள் குரங்குகளை வேட்டையாடிப் புசித்ததால் தான் இன்று சீனக்குரங்குகள் அழியும் நிலைக்கு சென்றுள்ளன என்ற தகவல் ஒன்றும் உள்ளது.

அதனால், மிருகக்காட்சிச் சாலைக்கு எனக் கொண்டு செல்லப்படும் இலங்கைக் குரங்குகள் சீனர்களின் சட்டிக்குள்தான் வேகப்போகின்



றன என்ற சந்தேகம் விலங்குகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இதைவிட வேறு மோசமான நோக்கங்களும் சீனருக்கு இருக்கக்கூடும் என்ற கருத்து ஒன்றும் உள்ளது. சீனப்படைகளில் ஒரு வானரப்படைப் பிரிவையே உருவாக்கும் நோக்கமும் அவர்களுக்கு இருக்கலாம் என்று தகவல் அறிந்த ஒருவர் சொல்கிறார்.

பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றது, அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் என்பதற்காக எமக்குச் சொந்தமான இந்தக் குரங்குகளை ஏற்றுமதி செய்வதை அனுமதிக்கலாமா? என்ற குரல்கள் அரசாங்கத்தைத் தடுமாறச் செய்திருப்பதாகவே தெரிகின்றது.

அதேவேளையில், எம்மிடமிருக்கும் இந்த குரங்குகளை எவ்வாறு கையாள்வது - பராமரிப்பது? என்பதற்கான திட்டம் ஒன்றை நாம் வகுத்துக்கொண்டால் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்காவது தீர்க்க முடியும்.

**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 160/= |
| உருளைக்கிழங்கு | - 150/= |
| பச்சைமிளகாய் | - 260/= |
| தக்காளி | - 140/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 160/= |
| கோவா | - 80/= |
| கரட் | - 200/= |
| பூசணி | - 70/= |
| புடோல் | - 130/= |
| வாழைக்காய் | - 150/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 460/= |
| வெண்டிக்காய் | - 240/= |
| கருணைக்கிழங்கு | - 120/= |
| பயற்றங்காய் | - 160/= |
| லீக்ஸ் | - 220/= |
| பீற்றூட் | - 150/= |
| கறிமிளகாய் | - 260/= |
| முருங்கைக்காய் | - 1600/= |
| போஞ்சி | - 230/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206/= |
| கனடா டொலர் - | 230/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 339/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 386/= |
| சுவிஸ் பிராங் - | 343/= |
| அமெரிக்க டொலர் - | 311/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 219/= |
| கனடா டொலர் - | 244/= |
| சீன யுவான் - | 48/= |
| யுரோ - | 358/= |
| ஜப்பான் யென் - | 2.4/= |
| சிங்கப்பூர் டொலர் | 246/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 407/= |
| சுவிஸ் பிராங் - | 365/= |
| அமெரிக்க டொலர் - | 327/= |



# கப்பல் சேவைக்கு தயாராகும் காங்கேசன்துறை துறைமுகம்

**- அகிலன் -**

> தினமும் காலை 8.00 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் கப்பல் நண்பகல் 12.00 மணிக்கு காரைக்காலை சென்றடையும். பின்னர் அங்கிருந்து மாலை 2.00 மணிக்குப் புறப்பட்டு இரவு 6.00 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும்.

யாழ்ப்பாணம் – காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஏப்.29இல் தொடங்கும் என்று இலங்கையின் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது. இருந்தபோதிலும் மே மாதம் நடுப்பகுதி வரையில் இது தாமதமாகலாம் என்று பிந்திய தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. காங்கேசன்துறை துறைமுகத் தயாரிப்பு வேலைகள் தாமதமடைவதே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

காங்கேசன்துறை இலங்கையின் பிற பகுதிகளை இணைக்கும் முக்கிய இடமாகவும், இந்தியாவுக்கு மிக அருகில் நாகை மற்றும் காரைக்கால் பகுதிக்கு 56 கடல் மைல் (100 கி.மீ) தொலைவில் உள்ள துறைமுகாவும் உள்ளது.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின்போது விடுதலைப் புலிகளின் கப்பல் படையை வீழ்த்துவதற்காக, இலங்கைப் படைகள் நடத்திய தாக்குதல்களில் காங்கேசன்துறை துறைமுகம் பலத்த சேதமடைந்தது.

உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அதிகம் வாழும் வடமாகாணத்தின் வளர்ச்சி பணிக்கு உதவ வேண்டும் என்று இந்தியா கொண்டுள்ள உறுதிப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலுள்ள காங்கேசன்துறை துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு 2018இல் ரூ.287 கோடி நிதியுதவியை அளித்தது.

இந்த நிதியுதவி மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தின் வர்த்தக ரீதியிலான பயன்பாட்டுக்கும், சரக்குக் கப்பல்களைக் கையாளவும், பயணிகள் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்ற வகையிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், மன்னார் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்தியர்கள் அதிகளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



அவர்களின் வசதிக்காக யூனியன் பிரதேசமான புதுச்சேரிக்கு உட்பட்ட காரைக்காலுக்கு, யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறையிலிருந்து பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்க இலங்கை அரசு, இந்திய மத்திய அரசிடம் விருப்பம் தெரிவித்தது. இதற்கு இந்திய மத்திய அரசும் ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில், கடந்த மாத இறுதியில் கொழும்பில் நடந்த இலங்கை கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில், யாழ்ப்பாணம் - காரைக்கால் பயணிகள் கப்பல் போக்குவரத்து குறித்து ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் காங்கேசன் துறையிலிருந்து காரைக்காலுக்குப் பயணிகள் கப்பல் சேவை ஏப். 29-ல் தொடங்கப்படும். முதற்கட்டமாக 120 பயணிகள் வரை பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயணியும் தலா 100 கிலோ வரையிலான பொருட்களை எடுத்துசெல்லலாம். கட்டணமாக இலங்கை ரூபாயில் 40 ஆயிரம் (இந்திய மதிப்பு ரூ.9878) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, காரைக்காலில் இருந்து காங்கேசன்துறைக்கு 5 நிறுவனங்கள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க விண்ணப்பித்திருந்தன. இதில் ஐ.என்.டி.எஸ்.ஆர்.ஐ. என்ற நிறுவனத்துக்கு அனுமதி கிடைத்துள்ளன குறிப்பிடத்தக்கது.

தினமும் காலை 8.00 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் கப்பல் நண்பகல் 12.00 மணிக்கு காரைக்காலைச் சென்றடையும். பின்னர் அங்கிருந்து மாலை 2.00 மணிக்கு புறப்பட்டு இரவு 6.00 மணிக்கு காங்கேசன் துறையை வந்தடையும்.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டு தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாக தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டீன் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகை பொருட்களை பெற்றுக்கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு

- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்கு தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்த கப் பைகளை மிக தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்ட ணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தை யும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக் கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்க ளது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தர வாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவ தற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங் களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபார திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர் பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற் றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக் கப்பட்ட சிறந்த ஔடதங்களை பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

---

### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

---

A9 வீதியில் இருந்து 1km தூரத் தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்ப னைக்கு. இயற்கையான சூழலில் உங்க

ளின் ஓய்வு காலத்தினை அமைதியாக வும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற் பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகை களைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கிய மும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல மான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந் தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறை யில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய் கிணறு அமைத்து தரப்படும்
0775652282

---

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள மருதனார்மடம், இணுவில், சுதுமலை, உரும்பிராய், உடுவில், கோண்டாவில் ஆகிய ஏதேனும் இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 071-0368973/ 075-4974782

---

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாட துரித மீட்டல் புலனக்குழு வில்(WhatsApp group) இணைய அனு மதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. -
0772469113

### சேவை

பிறந்தநாள் மற்றும் விஷேட நிகழ் வுகளுக்கு நீங்கள் விரும்பும் மேடை அலங்காம், புதிய உருவ அலங்காரங்கள் குறைந்த செலவில் தெய்துகொடுக்கப் படும்.
தொடர்பு - மாத்தி யோசி 077 0775907



# இயற்கையின் அவசரச் செய்தி

- நக்கீரன் -

புத்தரின் சீடர் ஆனந்தா ஒருமுறை மன்னரைக் காண அரண்மனைக்குச் சென்றார். மன்னர் அங்கே இல்லை. ஆனந்தரை வரவேற்ற அரசி, அவர் கேட்ட ஐந்நூறு ஆடைகளை அன்பளிப்பாகத் தந்தார்.

மன்னர் திரும்பி வந்ததும் அதைக் கேள்விப்பட்டு, 'ஒரு துறவி அத்தனை ஆடைகளையும் வைத்துக்கொண்டு என்ன செய்வார்? என்கிற ஐயத்துடன் புறப்பட்டு நேரே மடத்துக்குச் சென்றார்.

அங்கு நடைபெற்ற உரையாடல் இது:

"நீங்கள் வாங்கிவந்த ஆடைகளை எல்லாம் என்ன செய்வீர்கள் துறவியே?"

"இங்குத் துறவிகள் கிழிந்த ஆடைகளை அணிந்துள்ளனர். அவர்களுக்குத் தருவேன்."

"பழைய ஆடைகளை என்ன செய்வீர்கள்?"

"அவற்றைப் படுக்கை விரிப்புகளாகப் பயன்படுத்துவோம்."

"அந்தப் பழைய விரிப்புகளை?"

"தலையணை உறைகளாக மாற்றி விடுவோம்."

"பழைய உறைகள் என்னவாகும்?"

"அவை தரை விரிப்புக்களாகிவிடும்."

"பழைய விரிப்புகள்?"

"வாசலில் மிதியடிகளாக மாறிவிடும்."

"பழைய மிதியடிகள்?"

"தரையைத் துடைக்க வைத்துக் கொள்வோம்."

"பழைய கந்தல் துணிகள்?"

"அவற்றைக் கிழித்துச் சேற்றுடன் குழைத்து மடத்தின் சுவர்மீது பூசிச் சுவரை வலுப்படுத்துவோம்."

பொருள்களை மறுசுழற்சி செய்து எளிமையாக வாழவேண்டும் என்பதற்காக நமக்குக் கற்பிக்கப்படும் கதை இது. நல்லது. இந்த அறிவுரை மக்களுக்கு மட்டும்தானா? மன்னர் கேட்டது போலப் பதிலுக்கு ஆனந்தரும் மன்னரிடம் இப்படிக் கேட்டிருந்தால்?

"மன்னரே, இங்கு ஐந்நூறு பேர் ஆடைகள் இல்லாதிருக்க, உங்கள் சிறு குடும்பம் மட்டும் அவற்றை வழங்கும் நிலையில் இருப்பது எப்படி? நாங்கள் மண் குடிலில் வசிக்க உங்களுக்கு மட்டும் அரண்மனை கிடைத்தது எப்படி? எப்போதும் புதிய பொருள்களையே பயன்படுத்தும் உங்களுக்கு மறுசுழற்சி என்றால் என்னவென்று தெரியுமா?"

கேட்டிருந்தால் உறுதியாகத் துறவியின் தலை அவருடைய கழுத்தில் இருந்திருக்காது. இன்றைக்கு நம்முடைய நிலையும் இதுதான். அன்றைக்கு மன்னர் என்றால்



> இயற்கையைத் தனியுடைமையாக்கும் திட்டம் ஒன்றை 'பசுமைப் பொருளியல்' என்ற பெயரில் பவன் சுகதேவ் என்பவர் உருவாக்கினார். இது 2012 ரியோ டி ஜெனிரா புவி உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்துக்கும் 'பசுமை' லேபிள் ஒட்டும் உலகில், பொருளாதாரத்துக்கு ஒட்டுவது மட்டும் கடினமா என்ன?

இன்றைக்குப் பெருநிறுவனங்களும், அவர் களுக்குச் சாதகமான அரசுகளும் செயல் படுகின்றன.

2020ஆம் ஆண்டின் ஆக்ஸ்பாம் அறிக்கையின்படி உலகின் 99% மக்களின் செல்வத்தைப் போல இரண்டு மடங்கு செல்வத்தை உலகின் 1% பணக்காரர்கள் மட்டுமே வைத்துள்ளனர். ஆனாலும், பேராசை ஓய்வதில்லை.

இயற்கையைத் தனியுடைமையாக்கும் திட்டம் ஒன்றை 'பசுமைப் பொருளியல்' (Green Economics)என்ற பெயரில் பவன் சுகதேவ் என்பவர் உரு வாக்கினார். இது 2012 ரியோ டி ஜெனிரா புவி உச்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அனைத்துக்கும் 'பசுமை' லேபிள் ஒட்டும் உலகில், பொருளா தாரத்துக்கு ஒட்டுவது மட்டும் கடினமா என்ன?

பணம், உழைப்பைப் போன்று இயற்கையும் ஒரு மூலதனம் (Nature Capital) என்கிறது இத்திட்டம். அதன்படி ஆறுகள், கடல்கள், காடுகள், உயிரினங்கள் அனைத்தும் சந்தையில் வாங்கி விற்கும் சரக்குகளே. காட்டு மரங்களும் பவளத்திட்டுகளும் கரிவளியை உறிஞ்சி சேமிக்கின்றன. தேனீக்கள் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபட்டுக் காய்கனிகளை உருவாக்குகின்றன. இனி இவை இயற்கை நிகழ்வல்ல. அனைத்தும் பணத்தால் மதிப்பிடப்படும் சேவைப் பொருளாதாரம்.

ஒரு கோர்ப்பரேட் நிறுவனம் காட்டையோ பவளத் திட்டுப் பகுதியையோ விலைக்கு வாங்கினால் அதில் நடைபெறும் கார்பன் சேமிப்புக்கும் அந்நிறுவனமே உடைமையாளர். அதுபோல தேனீக்களின் மகரந்தச் சேர்க்கையால் உருவாகும் காய்கனிகள், தேன் ஆகியவையும் தேனீயின் சேவை.

எனவே, நிறுவனங்களுக்கு "சேவைக் கட்டணம்" செலுத்த வேண்டும். இது போன்ற இயற்கைச் செயல்பாடுகளுக்கு 'சூழல் பொருளியல் கணக்கீட்டு முறை' (SEEA - System of Environmental Economic Accounting) என்ற பெயரில் பணமதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு, ஓராண்டில் நடைபெறும் இயற்கை சேவையின் மதிப்பு 3,30,000 கோடி டொலர் என்று மதிப்பிட்டுள்ளனர்.

ஆனால், இயற்கையின் கணக்கில் பணம் என்பது வெறும் செலுலோஸ் மட்டுமே. இதை எவரும் உணர்வதில்லை. புவி, சேவைக் கட்டணம் எதுவுமின்றி 'இயற்கை 24X7' அலைவரிசையை நெடுங்காலமாக ஒலிபரப்பி வருகிறது.

அதன் வரலாற்றுடன் ஒப்பிடுகையில் பார்வையாளர்களாகிய மனித இனத்தின் காலம் என்பது வெறும் 0.0001 விழுக்காடே. எனவே, இயற்கையை வெறும் பணமாக மட்டுமே கணக்கிட்டுக்கொண்டிருக்கும் எந்தவொரு நொடியிலும் அதன் அலைவரிசையில் ஓர் அவசரச் செய்தி மின்னலாம்.

கண்ட திட்டுக்கள் திடீரென நெட்டி முறித்து ஆழிப்பேரலையாக உருவெடுக்கலாம். ஆழத்தில் குமுறும் லாவா வெடித்து எரிமலையாகச் சிரிக்கலாம். புடவியின் விண்கற்கள் புவிக்கோளை முத்தமிட வரலாம். உறங்கும் ஒரு நுண்ணுயிரி எந்நேரத்திலும் நம்மை விழித்துப் பார்க்கலாம்.

இதோ, ஓர் அவசரச் செய்தி!



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அடுத்த அத்தியாயம்

பாரிய பொருளாதாரப் பேரழிவிலிருந்து இலங்கை தற்போது படிப்படியாக மீண்டெழுந்து வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக அரசாங்கம் மற்றும் மத்தியவங்கி பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி, அதன் வாயிலாக பணவீக்கத்தினை மேலும் அதிகரிக்கா வண்ணம் கண்காணித்து, பணவீக்கத்தினை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இனிவரும் காலங்களில் மேலும் குறைப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வந்துகொண்டிருக்கின்றன. இது போன்ற பல உடனடி நடவடிக்கைகளின் காரணமாக சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் சரியான போக்கினை கவனத்திலெடுத்து 17 ஆவது தடவையாக முன்வைக்கப்பட்ட “பெயில் அவுட்” (Bail-out) கோரிக்கையினை கடும் நிபந்தனைகளுக்கமைய ஏற்றுக்கொண்டு முதற்கட்ட உதவித்தொகையினையும் வழங்கியுள்ளது.

முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக அரசு தனது “வரிவருமானத்தினை அதிகரிக்க வேண்டும்” என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையினால் கடந்த காலங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட வரி வருமானம் மிகவும் குறைவாக காணப்பட்டு வந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது மொத்த தேசிய உற்பத்திக்கு 7.4% ஆகக் குறைந்த வரிவருமானத்தினை பெற்று வருவதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதே சமயம் உலக வங்கியின் கூற்றுப்படி, ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 15%க்கும் அதிகமான வரி வருவாய் பொருளாதார வளர்ச்சிக்கும், இறுதியில் வறுமையைக் குறைப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

இதனைக் கவனத்தில் எடுத்த இலங்கை அரசாங்கம், பலதரப்பட்ட வரிசார்ந்த மாற்றங்களை முன்வைத்து பல்வகையான நேரடி மற்றும் மறைமுக வரிகளை தற்போது அமுல்படுத்தியுள்ளது. எவ்வாறிருப்பினும் தற்போது இலங்கையில் அண்ணளவாக 4% சதவீதமான மக்கள் மாத்திரமே வரி செலுத்துகின்றார்கள். இதனை நோக்குமிடத்து உண்மையாக வரி செலுத்துபவர்கள் கடந்த காலங்களில் வரிசெலுத்தாமல் வரி ஏய்ப்பவர்களாக (Tax Evaders) பலவகைகளில் வரிஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருப்பதை அரசாங்கம் இனங்கண்டுகொண்டுள்ளது. எனவே சரியான மற்றும் சிறந்த தரவுகளைப் பல வழிகளில் பெற்றுக்கொண்டு, அதன் மூலம் வரிசெலுத்துனர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அரசின் வரிவருமானத்தினை உரியமுறையில் அதிகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் காரணமாக தற்பொழுது புதிதாக ஒரு நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது யாதெனில்,

> “காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய சட்டங்களைப் பொதுமக்கள் தெரிந்துவைத்து அதன்படி செயல்படுதல் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். அந்த வகையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறையினையும் மற்றும் இனிவரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்களினை அறிந்து தெரிந்தும் அதன்படி செயற்பட்டு நாட்டினுடையதும், நிறுவனத்தினதும் மற்றும் தனிமனிதனுடையதும் இலக்குகளை வெற்றி கொள்வோம்”

“வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் –

* பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் பதிவாளர் தலைமையதிபதி
* கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதி
* மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி
* பண்டங்கள், வேலைகள் அல்லது ஆலோசனை மற்றும் ஆலோசனைசாராச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வேறேதேனும் அரசாங்க நிறுவனத்தின் அலுவலரொருவர்
* ஒரு நிதிநிறுவனம்
* ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது

ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறெவரேனுமாள்,

நிதிசார் கொடுக்கல்வாங்கல் பற்றிய தகவல்களுட்பட்ட அத்தகைய தகவல்களை இலத்திரனியற் படிவத்தில் கிரமமானவோர் அடிப்படையில் அல்லது விதித்துரைக்கபடக்கூடியவாறாக அத்தகைய எவரேனுமாளின் அல்லது நிறுவனத்தின் கட்டுக்கோப்பிலுள்ள அத்தகைய பதிவேடுகளுக்கான அணுகுகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.”

இந்த புதிய முறையின் முக்கியத்துவம் யாதெனில் இனிவரும்காலத்தில் உள்நாட்டு இறைவரித்திணைக்களம் (Inland Revenue Department) காலத்திற்கு காலம் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள்



செய்கின்ற சகலவிதமான கொடுக்கல் வாங்கல்களின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளப் போகின்றது. இந்தப் புதிய முறைமையினை அமுலாக்குவதற்கு முன்பாக இவ்வாறான தரவுகளை உள்நாட்டு இறைவரித்திணைக்களம் பலவித நிபந்தனைகளின் அடிப்படையில் மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. தரவுகளை தேடிச்சென்று பெற்றுக் கொள்ளவேண்டிய செயல்முறை மற்றும் பொறிமுறை, வளங்கள் குறிப்பாக நிதிவளம் மற்றும் ஆளணிப் பற்றாக்குறை போன்றனவை காரணமாக உள்நாட்டு இறைவரித்திணைக்களம் முழுமையாகச் செயற்பட முடியாமல் இருந்துவந்தது. இந்த குறைபாடுகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளிவைக்கும் முகமாக, உள்நாட்டு இறைவரித்திணைக்களம் பெறவேண்டிய தரவுகள் யாவும், காலத்திற்குக் காலம் அவர்கள் வேண்டிய வடிவத்தில் இலத்திரனியற் படிவத்தில் முறைப்படி மிக இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக புதிய வரி செலுத்துனர்கள் இனங்காணப்படுவார்கள், ஏற்கனவே வரி செலுத்துவோர்களின் சரியான விபரங்கள் உரிய முறையில் கிடைக்கப்பெறுதல், அரசின் நேரடி மற்றும் மறைமுக வரி வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு, சரியான பலதரப்பட்ட புள்ளி விபரங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய முறைமை, அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றுத்திறன் அதிகரிப்பு, அந்தந்த அரச நிறுவனங்களின் சேவையினை மிகச் சிறந்த முறையில் வழங்கக்கூடிய வாய்ப்பு, சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் படிப்படியாக குறைக்கப்பட்டு வருங்காலத்தில் அவ்வாறான நடவடிக்கைகள் இல்லாததொழிக்கப்படக்கூடிய வாய்ப்பு, வெளிநாடுகளுடன், வெளிநாட்டு நிதிநிறுவனங்களுடன் மற்றும் ஏனைய வெளிநாட்டு தகவல் பரிமாற்று நிறுவனங்களுடன் சிறந்த தகவல் பரிமாற்று முறைமை உருவாக்கப்படுகின்ற தன்மை மற்றும் நாட்டின் சமூக பாதுகாப்பைச் சிறந்த முறையில் பேணக் கூடிய பொறிமுறை உருவாகுதல் போன்ற பலதரப்பட்ட நன்மைகளினை இந்த முறையின் வாயிலாக அரசாங்கம் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே இனிவரும் காலத்தில் கொடுக்கல் வாங்கல்களினை உரிய முறையில் பேணி முறையாகக் கணக்கினைத் தயாரிப்படுத்தி, பட்டயக்கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு, அவற்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு (Inland Revenue Department) உரிய ஆவணங்களுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பித்து அவற்றிற்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்தும்போது பொதுமக்களாகிய நாம் பின்வருவனவற்றினை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தனியார் வியாபாரத்தில் பங்குகளை (Shares) வாங்குவதற்காக முதலீடு செய்யப்படுகின்ற பணத்திற்கான கணக் கினை சரியான முறையில் தெரியப்படுத்தல் வேண்டும். மற்றும் முதலீடு செய்து வைத்திருக்கும் பங்கினை விற்பதன் மூலமாக வருகின்ற பணத்தினையும் மேலும் மூலதன இலாபத்தினையும் சரியான முறையில் தெரியப்படுத்தி அதற்குரிய வரியினை முறையாக செலுத்துதல் வேண்டும்.

வாகனங்களை கொள்வனவு செய்யும் பொழுது, அதற்கு மேற்கொள்ளப்படுகின்ற மூலதன செலவினம் மற்றும் அதனை விற்கும்பொழுதும் முறையாக விபரங்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களுடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களினை செய்யும் பொழுது முழுமையான விபரத்தினை தெரியப்படுத்தல் வேண்டும். உதாரணமாக ஒப்பந்தம் (Tender) மூலமாகச் செய்யப்படுகின்ற கட்டிட நிர்மாண வேலைகள், பாதுகாப்பு சேவைகள் (Security Services), ஆலோசனைசாரச் சேவைகள், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்கல் போன்ற வியாபார நடவடிக்கைகள் தெரியப்படுத்த வேண்டும்.

நிதி நிறுவனங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற நிலையான வைப்புகள், சேமிப்பு கணக்குகள் மற்றும் வங்கி நடைமுறைக் கணக்கு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் உள்வாங்கப்படுதல் வேண்டும். எவ்வாறு பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு நிதிநிறுவனக் கணக்கில் வைப்பில் இடப்படுகின்றது?, எந்த தேவைக்காக வைப்பிலிருந்து பணம் எடுக்கப்படுகின்றது?, உள்நாட்டிலா அல்லது வெளிநாட்டிலா அத்தகைய பணம் செலவழிக்கப்படுகின்றது? அல்லது வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகின்றதா?, போன்ற அனைத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கொழும்பு பங்குபரிவர்த்தனை கொடுக்கல் வாங்கல் மூலமாக ஈட்டக்கூடிய இலாபத்துக்கு தற்போது வரி விதிவிலக்களிக்கப்பட்டிருப்பினும் பங்குகளை வாங்குவதற்கு எவ்வாறு நிதி கொண்டுவரப்பட்டது, முதலீடு செய்துவைத்திருக்கும் பங்கு விற்பனை மூலம் வெளியே எடுக்கப்படுகின்ற நிதி எங்கே செல்கின்றது, மற்றும் "பங்கு லாபம்" (Dividend) முறையாக வருமான வரி திரட்டில் (Income Tax Return) தெரியப்படுத்தி அதற்கான வருமான வரியினைச் செலுத்துவது கடமையாகும்.

அரசாங்கத்தினால் வருங்காலத்தில் "சொத்து வரி" (Wealth Tax) அமுல்படுத்தப்படவுள்ள காரணத்தினால் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் விபரங்களை முழுமைப்படுத்தல் வேண்டும்.

மேலும் இந்த புதியமுறைமையின் மூலம் பலவகைகளில் தகவல் பெறக்கூடிய தன்மை இருப்பதனால் தனி ஒருவர் மற்றும் நிறுவனங்கள் யாவும் முழுமையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்து விபரங்களை உரிய முறையில் கிரமமாக சமர்ப்பிப்பது கடமையாகும்.

இதை நோக்கும்பொழுது, தனி ஒருவர் மற்றும் நிறுவனங்கள் சார்ந்த கொடுக்கல் வாங்கல் பற்றிய முழுவிபரங்கள் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு பல வகைகளில் உடனுக்குடன் தெரிவிக்கப்படப்போகின்றது. இதை அனைவரும் கவனத்திற்கொண்டு மிகவும் நுட்பமான முறையில் திட்டமிட்டு தங்களுடைய சகலவிதமான கொடுக்கல் வாங்கல்களையும் சட்டத்திற்கு உட்பட்டு செய்வது அவசியமாகும். இல்லையென்றால் உண்மையான செலவினங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் அதனால் வரி வருமான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதிகமான வரி, தண்டப்பணம் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

எனவே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய சட்டங்களை பொதுமக்கள் தெரிந்துவைத்து அதன்படி செயல்படுதல் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். அந்த வகையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்கூறிய புதிய முறைமையினையும் மற்றும் இனிவரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டங்களினை அறிந்து தெரிந்து அதனபடி செயல்பட்டு நாட்டினுடையதும், நிறுவனத்தினதும் மற்றும் தனிமனிதனுடையதும் இலக்குகளை வெற்றி கொள்வோம்.



எங்கள் வாழ்வும் வளமும்

- தமிழ்க்கவி -

# கொச்சிக்காய் மிளகாய்

மிளகு என்ற சொல்லிலிருந்துதான் மிளகுகாய் வந்தது என்று என் பூட்டி சொல்வார். அது எந்தளவுக்கு உண்மையோ தெரியாது. உணவைச் சுவையாக்கும் பொருட்களின் பட்டியலில் மிளகாய் முக்கியமான இடத்தைக் கொண்டிருக்கிறது. மிளகாய் இல்லாமல் சமைக்கவே முடியாது.

மிளகுமட்டுமே கொண்ட எமது உணவுப் பாரம் பரியத்தில் மிளகாய் எப்ப வந்தது.

மிளகாயின் பிறப்பிடம் மொராக்கோ என்று யாரோ சொல்லக் கேள்வி. ஆனால் இலங்கைக்கு மிளகாய் வந்த கதை வேறு. சாதாரணமான பச்சை மிளகாயை அதையும் பிஞ்சுமிளகாய் என்பதே நாட்டு வழக்கிலிருந்து வந்தது. இதை பழுக்கப்போட்டு. பின் காயப்போட்டு அதை தூளாக்கி கறி வகைகளில் சேர்ப்பது வழக்கம். இதிலும் எங்கள் தமிழ்த் தாய்மார் பெரிய சாதனையைத்தான் செய்து வருகிறார்கள். எப்படியா?

நீங்கள் தொலைக்காட்சியிலோ அல்லது கைபேசியிலோ ஒரு சமையல் காட்சியைப் பாருங்கள். அங்கே சமைக்கும் ஒரு பிரபல சமையற்காரர் முதலில் கறிக்கு கொஞ்சம் மிளகாய்ப் பொடி ஒரு கரண்டி தனியாத்தூள், கொஞ்சம் சீரகப்பொடி, அப்படியே சிறிது மஞ்சள்பொடி, மிளகுப்பொடி என்று நீட்டி முழக்குவதையும் எல்லா வற்றுக்கும் தனித்தனி டப்பாக்களில் (அதற்குமான விளம்பரம்தான் இது) வைத்து நாகரீகமாகக் கரண்டியால் அள்ளியும் கிள்ளியும் தெளிப்பதைக் காணலாம்.

எமது பெண்கள் கறிக்கு மிளகாய்த் தூள் எப்படி அரைத்து வைத்து சேமிக்கிறார்கள் தெரியுமா?

செத்தல் மிளகாய் ஒரு கிலோ. அதற்கு மல்லி அரைக் கிலோ (இது மிளகாயின் காரத்திற் கேற்பக் கூடிக்குறையும்) சோம்பு நச்சீரகம் வெந்தயம் தலா நூறுகிராம் மிளகு மஞ்சள் நூறுகிராம், நூற்றைம்பது கிராம் புழுங்கலரிசி. ஒரு கரண்டி உழுத்தம் பருப்பு. கறிவேப்பிலை சிறு துண்டு கறுவா இவை விருப்பத்தேர்வு. எல்லாவற்றையும் தனித்தனியே வறுத்து, பட்டுப்போல இடித்து போத்தல்களில் சேகரித்து வைத்தால் ஒரு மாதத்திற்கு தேவையான கறித்தூள் தயார். அதன்பின் முன்னர் கூறியது போல மிளகாய்ப்பொடி தனியாப்பொடி, சீரகப்பொடி என்று அட்சரம் வாசிப்பதில்லை. எல்லா வீடுகளிலும் இதே தயாரிப்பு இருப்பதால் பெண்கள் சில நேரங்களில் தமது கறித்தூள் இடிக்கப்பிந்திவிட்டால் அயலில் பாறியக்காவிடமோ பத்தினியக்கா வீட்டிலோ கைமாற்றாக நாலுகரண்டி கறித்தூளை பெற்று அதைத் திருப்பி செலுத்தவும் முடியும்.

இந்த செத்தல் மிளகாய் அவரவர் தோட்டத்திலேயே விளையும். நான் சிறுமியாக இருந்தபோது எமது சேனைப்பிலவில் மல்லி, பெரிய சீரகம் கடுகு வெந்தயம் ஆகிய தானியங்களையும் விதைத்து அறுவடை செய்தோம். அது புதிதாக காடுவெட்டிய நிலம். புத்து மேடுகளில் இவை விளையும். காலப்போக்கில் அதை கைவிட்டு விட்டுக் கடைகளில் வாங்க ஆரம்பித்தனர். காரணம் சில விளைபொருட்களுக்கு வரிவிதிப்பு இருந்தது. அப்பா சொன்னார் 'கடுகு காலேக்கருக்கு மேல் போட்டால் பெமிற் எடுக்க வேண்டும்' என்று. மல்லியை நாங்கள் புலவுத் தோட்டமாகிவிட்ட பின்னும் பயிரிட்டோம். இது மிளகாயைப்பற்றிய கதை.

எனவே நாங்கள் மிளகாயைப் பார்ப் போம். உலகில் ஏராளமான வகைகளில் மிளகாய் இருந்தாலும் எங்கள் ஊருக்கு காரமான மிளகாய்களை கொண்டு வந்தவர்கள் இந்தியாவிலிருந்து வந்த கொச்சியை சேர்ந்தவர்கள்தான். அதனா லேயே அதற்கு கொச்சிக்காய் என்ற பெயர் ஒட்டிவிட்டது. பச்சை மிளகாயில் வெள்ளை கறுப்பு என்று கூறும்படிக்கு மெல்லிய பச்சையிலும் கரும் பச்சையிலும் மிளகாய் பயிரிடப்பட்டது. இதையே பழுக்கவிட்டு வீட்டுக்குத் தேவையான செத்தல் மிள காயையும் பெற்றுக் கொண்டோம். இதை விட காடுகளில் இயல்பாக தான்கோன்றி யாக வளரும் கானக் கொச்சிக்காய் தென் ஈக்கில் பருமனில் ஒரு சென்ரி மீட்டர் நீளமே இருக்கும். ஒரு காய் பத்து பச்சை மிளகாய்க்கு சமமான காரமுடையது. ஒரு செடி வருடக்கணக்கில் நின்று காய்க் கும்.நோய் வரட்சி எதுவும் இதை தாக்காது. கோடையிலும் வாடிவாடி நின்றாலும் மழைவர நிமிர்ந்து காய்க்கும். காடுகளில் நிற்பதால் அது ஊருக்கே பொதுச் சொத்து.

வீடுகளில் நாம் உருவாக்கும் பொத்த மிளகாய் இதை மூட்டைக் கொச்சிக்காய் எனவும் சொல்வர். இதன் வாசனை



எனக்கு மிகவும் பிடிக்கும். காரம் மிக அதிகம். இதில் பல வடிவங்கள் உள்ளன அவற்றுக்கெல்லாம் தனித்தனி தாவரப் பெயர்களும் உள்ளன. இது விஞ்ஞானம் பேசுகிற கட்டுரையல்ல. நாங்கள் அழைக் கும் பெயரில் சொல்கிறேன். பணியார மிளகாய் வட்டமாக பின்புறம் குழிவாக வரும். நீளவாட்டில் நடுவில் உப்பிப் பருத்தது ஒருரகம். அப்படி உப்பாமல் இருப்பது ஒரு ரகம். எப்படியோ இவை அனைத்தும் குணத்தில் காரத்தில் சுவையில் அருமையாக இருக்கும். இரண்டு மிளகாயை கைகளால் பிய்த்துப் போட்டால், அந்த நாள் முழுதும் தேகம் அரித்தால்கூட கையால் சொறிய மாட்டோம். சொறிந்தால் திகுதிகுவென எரியும். இந்த காரத்தை அளப்பார்களாமே எஸ்.எச். கியூ என்றொரு அளவு அதில் பல லட்சக் கணக்கில் இதன் காரம் வருகிறது என் றால் பாருங்கள்.

கொச்சிக்காய் வர்க்கத்தில் 'ஆகாசம் பாத்தகொச்சி' இது எனது பாட்டி காலத்தி லிருந்து சொல்லப்பட்ட காரணப் பெயர். ஓர் அங்குல நீளத்தில் வெள்ளையாக காய்க்கும் சின்ன மிளகாய். முழுக்காய்க ளும் விறைத்தவாறே வானத்தை நோக்கி நிமிர்ந்தே நிற்கும். காரம் அபாரம். சில் லென்று மரம் நிறையக்காய்க்கும். ஒரு இலைக்கென வரும் கணுவில் மூன்று நான்கு காய்கள் காய்க்கும். காய்க்கத் தொடங்கிவிட்டால் இலைகளைவிடக் காய்கள் அதிகமாக தெரியும். எந்தக்கறிக் கும் போடலாம். கீறி உப்பில் ஊறவைத்துப் பொரித்தால் அடடடா என்ன சுவை என்ன சுவை.



இதே வகையில் பச்சை நிறத்தில் காய்க்கும் மரமும் வயலட் நிறத்தில் காய்க்கும் மரங்களும் தனியாக உண்டு. அவற்றின் காரம் சற்று குறைவுதான். என் வீட்டில் ஒரு கானக்கொச்சிக்காய் மரமும் இரண்டு வெள்ளைக் கொச்சிக்காய் மரமும் உண்டு. என்றால் எனது அயலி லுள்ள நான்கு வீடுகளுக்கும் அது போது மானதாக இருக்கிறது. என்பது எனக்கு பெருமைதான்.

ஒரு காலத்தில் அட என்னப்பா ஒரு காலத்தில் சிறிமாவோ ஆட்சிக் காலத்தில். (ம்-மனிசி செத்தும் சிவலோகம் போட்டுது இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இருந் திருந்தா்நான் இந்த கதைய எழுதவே தேவையில்லை.) இந்த செத்தல் மிள காய்க்கும் பெரிய றிமாண்ட் ஓ - மன்னிக் கவும் பெரிய டிமாண்ட் இருந்தது. சங்கக் கடைவழிய எண்ணித்தான் கொடுத்தார் கள். மிளகாய்ச் செய்கைக்கென பெரிய பெரிய குடியேற்றங்கள் குளநீர்ப்பாசனங் கள். என விசுவமடு, மல்லாவி வவுனிக் குளம் வட்டக்கச்சி மாகாவலி பிரதேசம் என பல வழிகளிலும் மக்களை உற்சா கப்படுத்தி மிளகாய்ச் செய்கையில் ஈடுபட வைக்கப்பட்டது. மிளகாயை கொழும்புக்கு ரயிலில் ஏற்றிச் சென்ற விவசாயிகள் கொழும்பிலிருந்து உழவியந்திரமும் பெட்டியுமாக வந்திறங்கிய வரலாறு உண்டு. அடுத்து வந்த ஆட்சியாளர்கள் உதெல்லாம் தேவையில்லாத வேலை மிளகாயை இறக்குமதி செய்தால் எங்கள் விவசாயிகள் வெய்யிலில் கஸ்டப்பட வேண்டியதில்லை எனக் கருதி அதை இறக்குமதி செய்தனர்.

அந்தக்காலத்தில் பல புதிய வர்க்க மிளகாய் இனங்கள் இங்கு கொண்டு வரப்பட்டன. நிரம்பிய விதைகளுடனான குன்டுமிளகாய். சந்தாக்கா எனப்படும் மேல்நோக்கி காய்க்கும் மிகுதியான காரங்கொண்ட மிளகாய் இரண்டும் நாங்களும் பயிரிட்டோம் இரண்டுமே அறுவடை செய்வதைப்பற்றி எமது மக்க ளுக்கு அறிவுறுத்தப்படுவதில் தவறிவிட் டனர்.

சிறிய மிளகாய் என்பது மட்டுமல்லாது அவற்றை செடியிலிருந்து அகற்றுவதும் கடினமாக இருந்தது. சந்தாக்கா மிளகாய் காம்பில்லாத செத்தல் என அழைக்கப்பட் டது. காரணம் காம்பு செடியை விட்டு வராது அவ்வளவு பற்று. இதற்கு சரிசம மாக மல்லி கலந்தே கறித்தூள் அரைத் தார்கள். அவ்வளவு காரம். அறுவடை செய்வதில் சிக்கல் என்று கைவிட்டார் கள். இனி இதை காயில் ஆய்ந்து பச்சை மிளகாயாக விற்கவும் முடியாது. எங்கள் விவசாயிகள் எப்பவும் ரூ இன் வண்தான் செத்தலும் பச்சைமிளகாயும் ஒரே செடியில் எதிர்பார்த்தார்கள்.

'சந்தாக்கா' குண்டுமிளகாய் இரண் டும் விதையாகவே உழவுசாலில் விதைப் பதுதான். அவை முளைக்குமுன் பாத்தி கட்டி விட்டால் நீர் பாய்ச்சலாம். மானாவாரி யாகவும் விளையும். இரண்டரை மூன்று மாதத்தில் முழுமரமும் காய்த்து செடியின் இலைகள் கொட்டி மரமும் பழுமுமாக நிற்கும். செடியோடு பிடுங்கி மிளகாய் காய்ந்தபின் காய் உட்புறமாகவும் செடியின் வேர் வெளிப்புறமாகவும் நிற்கும்படி வட்டமாக அடுக்கி போர் போட்டு பாடம் பண்ணுவார்கள். எள் புகையிலை போன் றவையும் அப்படித்தானே. நான்கு நாட்கள் கழித்து செடிகளை இழுத்தால் மிளகாய் தனியே கொட்டிக்கிடக்கும். செடியை தூக்கிப் போட்டுவிட வேண்டியதுதான். விதை நிறைந்த காரமான மிளகாய். இப்போது நான் அதைக்காண்பதில்லை. யாரும் இருந்தால் சொல்லுங்கள். ஒரு பத்தடிப் பரப்பில் போட்டால் ஒரு வருடத் திற்கு போதும்.






- என்.விஜயகுமார் -

> முதலீட்டை சீக்கிரமாக ஆரம்பித்து மாதந்தோறும் நீண்ட காலத்துக்குத் தொடர்ந்து முதலீடு செய்து வரும்போது, மிக அவசியத் தேவைக்கு மட்டுமே அதிலிருந்து பணம் எடுக்க வேண்டும். நாம் பணம் சேர்த்து வைத்திருக்கிறோம் என்பதற்காக எடுத்ததுக்கெல்லாம் அந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்யக்கூடாது

# மாதச் சம்பளக்காரர்கள் பின்பற்ற வேண்டிய நான்கு முதலீட்டு விதிமுறைகள்!

இன்றைய நிலையில், மாதச் சம்பளக்காரர்கள் பலரின் வேலை நிலை இல்லாமல் இருக்கிறது. அமெரிக்காவில் இருக்கும் பெரிய நிறுவனங்கள் கொத்துக் கொத்தாக ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கி, வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்க, நம் நாட்டிலும் பொருளாதார நெருக்கடியால் ஆட்குறைப்புச் செய்வதற்கு பல நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பல ஊழியர்களின் தினப்படி வாழ்க்கையே கேள்விக்குஉள்ளாகிக்கொண்டிருக்க, அடுத்த வேலை கிடைக்கும் வரை தங்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறை வேற்றிக்கொள்வது எப்படி என்று தெரியாமல் தவிக்கிறார்கள். மாதச் சம்பளம் பெறும் இளைஞர்கள் சில எளிய, முக்கியமான விதி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தங்களுடைய முதலீட்டை இலாபகரமாக மாற்றிக்கொள்ள முடியும். அதற்கு பின்வரும் இந்த 4 விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### சீக்கிரமாக முதலீட்டை ஆரம்பியுங்கள்

மாதச் சம்பளக்காரர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக முதலீட்டை ஆரம்பிக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக தொகையை சேர்க்க முடியும்.

முருகன், ரவி, குரு மூவரும் கல்லூரி காலத்திலிருந்தே நண்பர்கள். இவர்கள் மூவருக்கும் ஒரே நிறுவனத்தில் ஒரே நேரத்தில் அவர்களின் 25 வயதில் வேலை கிடைக்கிறது. முருகன் வேலைக்குச் சேர்ந்ததும் தன் ஓய்வுக் காலத்துக்கென மாதம் ரூ.3,000 முதலீடு செய்ய ஆரம்பிக்கிறார். இதுவே ரவி தன் 35ஆவது வயதிலும், குரு தன் 45ஆவது வயதிலும் மாதம் ரூ.3,000 முதலீடு செய்ய ஆரம்பிக்கிறார்கள். மூவரும் அவர்களின் 60 வரைக்கும் முதலீடு செய்து வருகிறார்கள். பணி ஓய்வு பெறும்போது முருகனுக்கு ரூ.1.9 கோடி கிடைக்கிறது. ரவிக்கு ரூ.57 லட்சமும், குருவுக்கு ரூ.15 லட்சமும் கிடைக்கிறது.

முருகனைப் போல, சீக்கிரமாகவே நீங்கள் முதலீடு செய்தால், ஓய்வுக்காலத்



தில் அதிக தொகை கிடைக்கும். ரவி, குரு போல, கால தாமதமாக ஆரம்பித்தால், குறைந்த தொகையைத்தான் உங்களால் சேர்க்க முடியும். அப்போது, ஓய்வுக்காலச் செலவுகளுக்குப் போதுமான பணம் உங்களிடம் இருக்காது.

### மாதம்தோறும் தொடர் முதலீடு

முதலீட்டை சீக்கிரமாக ஆரம்பிப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் மாதம்தோறும் தொடர்ந்து முதலீடு செய்வது. பொதுவாக, நம்மவர்கள் சம்பளத்தில் செலவு போக மீதியுள்ளதை சேமிப்பார்கள். இப்படி செய்யும்போது சில மாதங்கள் ஏதாவது கூடுதலாக செலவு செய்துவிட்டால், அந்த மாதம் சேமிக்க பணம் எதுவும் இருக்காது. இதற்கு பதில், வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை சேமிப்புக்கென முதலிலேயே ஒதுக்கி வைத்துவிட்டு, மீதி உள்ளதைச் செலவு செய்ய வேண்டும். சம்பளத்தில் குறைந்த பட்சம் 10% தொடங்கி 30% வரை சாதாரணமாக சேமிப்பது அவசியம்.

### நல்ல லாபத்துக்கு நீண்ட கால முதலீடு

சீக்கிரமாக முதலீட்டைஆரம்பிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி ஏற்கெனவே பார்த்தோம். அப்படி ஆரம்பிக்கும் முதலீட்டை நீண்ட காலத்துக்கு மேற்கொள்வதும் அவசியம். அப்படி ஐந்து ஆண்டுக்கு மேற்பட்ட நீண்ட கால முதலீடு என்கிறபோது பணவீக்க விகிதத்தைவிட அதிக வருமானம் தரும். மற்றும் வருமான வரி அனுகூலம் அளிக்கும். பங்குச் சந்தை சார்ந்த முதலீடுகளான நிறுவனப் பங்குகள், பங்குச் சந்தை சார்ந்தவற்றில் முதலீடு செய்துவரலாம்.

இந்தப் பங்குச் சந்தை சார்ந்த முதலீடுகளில் நீண்ட காலத்தில் ஆண்டுக்கு சராசரியாக 12 சதவிகிதத்துக்கு மேல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

### மிக அவசியத் தேவைக்கு மட்டுமே...

முதலீட்டைச் சீக்கிரமாக ஆரம்பித்து மாதம்தோறும் நீண்ட காலத்துக்குத் தொடர்ந்து முதலீடு செய்துவரும்போது,

(22ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

ஞாயிற்றுக்கிழமை
16.04.2023

# நாங்கள் நினைத்தால் களைகளையும் காசாக்கலாம்




இயற்கை நமக்கு தந்த அளப்பெரிய கொடைகளை பேணிப் பாதுகாத்து நமது அடுத்த சந்ததிக்கும் வழங்க வேண்டியது நம்அனைவரதும்கடமையாகும். அந்த வகையில் நமது பாரம்பரிய மரக்கறி விதைகளையும்மூலிகை பொருட்களையும் உற்பத்தி செய்யும் GNANAM’s (PVT) LTD company யின் தலைவர் திரு கந்தசாமி ஞானரூபன் அவர்களை தமிழர் பொருண்மியம் செவ்வி கண்டது

கேள்வி – மேற்படி பாரம்பரிய விதைகளையும் மூலிகைகளையும் பத்திரப்படுத்தி விற்பனை செய்வதில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

பதில் – நாங்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்த குடும்பம். சிறு வயதுகளில் சின்



GNANAM’s (PVT) LTD company யின் தலைவர் திரு கந்தசாமி ஞானரூபன்

னண்ணாவின் தோட்டங்களில் எனது பொழுதுகளைக் கழித்திருக்கிறேன். எனது அம்மாவும் சகோதரர்களும் ஒரு அருமையான தோட்டக்காரர்கள். எத்தகைய கால சூழ்நிலையிலும் எங்களது நிலத்தில் ஏதோ ஒரு பயிர் விளைந்து கொண்டே இருக்கும். ஆனால் இதனை ஒரு தொழிலாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் கடந்த தை மாதம் புதிய வெளிச்சம் என்ற நிறுவனத்தின் இயற்கை விவசாயிகளுக்கான கருத்தமர்வுகளின் மூலம் தான் கிடைத்தது. ஒவ்வொரு நாளும் இயற்கை விவசாயத்தைப் பற்றிய பேச்சு வீட்டில் எழும் போதெல்லாம் என்னுடைய பங்குக்கு நான் என்ன செய்யலாம் என்று எண்ணிய போது தான் உருவானது எனது சிறிய வீட்டுத் தோட்டமும் இந்த பாரம்பரிய விதைகளை உற்பத்தி செய்யும் திட்டமும்.

கேள்வி – பாரம்பரிய விதைகளை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

பதில் – தற்போது கலப்பின விதைகளும் கன்றுகளும் மிகவும் சாதாரணமாக நமது பழக்கத்தில் இருக்கிறது. மிக விரைவாகவும் அதிகமான பலனையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் நமக்கு கிடைக்கும் மரபணு மாற்றப்பட்ட விதைகளில் இருந்து எமது சமூகத்திற்கு பாரம்பரிய விதைகளை அறிமுகப்படுத்துவதற்காக நானே சில விதைகளை உருவாக்கியும் மற்றும் இயற்கை ஆர்வலர்களின் பண்ணைகளில் மிகவும் பத்திரமாக பெறப்பட்ட விதைகளையும் பெற்று மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி வருகிறேன். விவசாயிகள் தற்போது இதனை பெரிதும் விரும்பி பெற்றுக் கொள்கின்றனர். இந்தச் செயல் திட்டத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே முல்லை தீவில் வசிக்கும் திரு நேசன் என்பவர் மிகவும் அருமையாக செய்து வருகிறார்.

*இயற்கை நமக்கு தந்த அளப்பெரும் கொடைகளில் மூலிகைகளும் ஒன்று. தேடுவாரற்று நிலத்தில் படர்ந்து கிடக்கும் ஒவ்வொரு மூலிகைகளும் மிகுந்த மருத்துவ பலன் கொண்டவை. நாங்கள் நினைத்தால் களைகள் அனைத்தையும் காசாக்கலாம்.*

**நேர்கண்டவர் – கொற்றவை**

கேள்வி – வீட்டு தோட்டத்திற்கான விதைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களிடம் உள்ள பிரத்தியேகமான செயறிட்டத்தை விளக்குங்கள்

பதில் – ஒன்பது வகையான வீட்டுத் தோட்ட மரக்கறி விதைகளை இரண்டு பகுதியாக பிரித்து பொதி செய்து விற்பனைக்கு அனுப்புகிறோம்.

இதில் கீரை வகைகள் கிழங்கு வகைகள் மற்றும் மரக்கறி வகைகள் என்று பலதும் அடங்குகின்றன.

வீட்டு தோட்டத்திற்காக ஒவ்வொன்றிலும் 5 கிராம் கொண்ட ஒன்பது விதைகள் 500 ரூபாய்க்கும் ஒவ்வொன்றும் 10 கிராம் கொண்ட ஒன்பது விதமான விதைகள் ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்கிறோம்...

நம்மை தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவும் தபால் மூலமாகவும் பொதிகளை அனுப்பி வைக்கிறோம்

கேள்வி – மூலிகைகளை பதப்படுத்துவது தொடர்பாக நீங்கள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை செய்து வருகிறீர்கள்?

பதில் – இயற்கை நமக்கு தந்த அளப்பெரும் கொடைகளில் மூலிகைகளும் ஒன்று. தேடுவாரற்று நிலத்தில் படர்ந்து கிடக்கும் ஒவ்வொரு மூலிகைகளும் மிகுந்த மருத்துவ பலன் கொண்டவை. நாங்கள் நினைத்தால் களைகள் அனைத்தையும் காசாக்கலாம். இவற்றிற்கு நமது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகமான கேள்வி இருக்கிறது. இவற்றை சரியான விதத்தில் இனம் கண்டு மிகவும் பாதுகாப்பான முறையில் பத்திரப்படுத்தினால் ஒவ்வொரு மூலிகைகளையும் மிகப் பெறுமதியான அளவில் விற்பனை செய்ய முடியும். இதுவரைக்கும் மூலிகைகளை மாத்திரம் பதப்படுத்தி அனுப்பி வந்தோம் இப்போது மூலிகை சவர்க்காரங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இது பலருக்கு தொழில் வாய்ப்பை கொடுக்கக்கூடிய ஒன்றாக அமையும் என்று நம்புகிறோம்.

கேள்வி – இவற்றுக்கான சந்தை வாய்ப்புகளை நீங்கள் எப்படி பெற்றுக் கொள்கிறார்கள்?

(23ஆம் பக்கம் பார்க்க)



“பொதுவாக, நாம் அதிகமாகச் சம்பாதித்திருந்தாலும், குறைவாக சம்பாதித்தாலும் நாம் சம்பாதித்த பணம் எங்கே போனது என்று தெரியாமல் தவிக்கிறோம். இணையத்தில் அதிரடி சலுகைகளைப் பார்த்து, பொருள்களாக வாங்கிக் குவித்துவிட்டு, பணம் எங்கே போனது என்று கேட்பது கேலிக்கூத்தான விஷயம்”

# பணத்தை நிர்வாகிக்க தெரிந்துகொள்ளுங்கள்

“உங்களால் பணத்தை நன்றாக நிர்வகிக்க முடியுமா என்று கேட்டால், அதற்கு உங்களுடைய பதில் என்ன?

முடியாது, சில சமயங்களில் மட்டும் முடியும், என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை...

இவற்றில் ஏதாவது ஒரு பதிலைத்தானே சொல்வீர்கள். என்னுடைய 20 வருட தொழில் அனுபவத்தில் தன்னுடைய பணத்தை மிகச் சரியாக நிர்வகிக்கத் தெரியும் என்று திட்டவட்டமாகச் சொல்லும் நபரை நான் பார்த்தேயில்லை. என்னையும் சேர்த்து தான் சொல்கிறேன்” என்கிறார் க்ளேர் பேரட் (Claer Barrett) என்கிற அமெரிக்கப் பெண்மணி.

அவர் எழுதிய ‘வாட் தே டோன்ட் ரீச் யூ எபௌட் மணி’ (What They Don’t Teach You About Money) என்ற புத்தகத்தில்தான் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

க்ளேர் பேரட் நிதித்துறை சார்ந்த பத்திரிகையாளர். ஃபைனான்ஷியல் ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிதி நிர்வாகம் பற்றி நிறைய நிகழ்ச்சிகளை வடிவமைத்து அளித்தவர். பணத்தை நிர்வாகம் செய்வது குறித்து அவர் எழுதிய புத்தகத்தில் விளக்கமாகச் சொல்லியுள்ளார்.

## 40 வயதில் பணம் சேர்க்கும் ஆசை

“பணத்தை நிர்வகித்தல் என்பது நம் அனைவருக்கும் பெரும் பிரச்சினையாக இருக்க முக்கியமான காரணம், நாம் பாதி வாழ்க்கையை வாழ்ந்து முடித்த பின்தான் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். பாதி வாழ்க்கையை வாழ்ந்து முடித்தபின் பணம் குறித்த ஏக்கமும் பதற்றமும் நம் மனதில் குடிகொண்டு விடுகிறபடியால் பணம் குறித்த விஷயம் அனைத்தும் நமக்குக் கடினமான ஒன்றாகி விடுகிறது.

இதையும் தாண்டி நம் ஒவ்வொருவர் மனதிலும் பணம் குறித்த ஒரு டஜன் ரகசிய கேள்விகள் இருக்கவே செய்கின்றன. பலரும் பல காலம் தாங்களாகவே இதற்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்க முயன்று தோற்கவே செய்கின்றனர். ஏனென்றால், பணம் குறித்த விஷயங்களை எப்படிக் கையாள்வது என்று நமக்குப் பள்ளி, கல்லூரி அல்லது பணிபுரியும் இடம் என எதிலும் சொல்லித் தருவதே இல்லை. பணம் குறித்த நம்முடைய அணுகுமுறையை மிக மிகக் குறைந்த அளவே நம்முடைய பெற்றோர்கள் உருவாக்க உதவுகின்றனர்.

பொதுவாக, பணம் குறித்து யாருமே தங்களுடைய நெருங்கிய நண்பர்கள், வாழ்க்கைத்துணை என யாரிடமுமே வெளிப்படையாகப் பேசுவதில்லை. குறைந்த பட்சம் புலம்பல் அல்லது அதிகபட்சம் பெருமை பேசுவது என்பதுதான் பணம் குறித்த பெரும்பான்மையான நிலைப்பாடாக இருக்கிறது. ஏனென்றால், பணம்என்றவுடன் நாம் ஒருவித உணர்வை அதனுடன் இணைத்துக்கொள்ள ஆரம்பித்து விடுகிறோம். இதனால் உண்மை பேசுவதைத் தவிர்க்கிறோம்.

நம்மில் பலருக்கு நிதி ஆலோசகர்களை வைத்துக்கொள்ளும் அளவுக்கு வசதி இருப்பதில்லை. இவை அத்தனையும் சேர்ந்து நிதி சார்ந்த விஷயங்களைக் கையாள்வதில் சோம்பேறித்தனத்தை நம்முன் கொண்டுவந்துவிடுகிறது. இந்த சோம்பேறித்தனத்தை தான் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உபயோகித்துக்கொள்கின்றன” என்று சொல்லும் ஆசிரியர், பண நிர்வாகம் குறித்த ஏழு முக்கியமான பழக்கங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

## ஏழு பழக்கங்கள்

“நிதி நிர்வாகத்தில் ஒருவர் சிறந்து விளங்க வேண்டுமெனில், ஏழு பழக்கங்களை அவசியம் கொண்டிருக்க வேண்டும் இந்தப் பழக்கவழக்கங்கள் பணம் குறித்த எதிர்மறை எண்ணங்கள் உங்களை விட்டு விலகவும், நல்ல பாசிட்டிவ் எண்ணங்களுடன் பணம் குறித்த விஷயங்களை அணுகவும் உதவும்” என்கிறார் ஆசிரியர். அந்த ஏழு பழக்கங்கள் எவை?

பணம் என்பது மிகவும் உணர்வுபூர்வமான ஒரு விஷயமாக நம்மிடையே நிலவுகிறது. நாம் ஒவ்வொருவரும் பணத்துடன் வெவ்வேறு விதமான உணர்வுபூர்வமான உறவைக் கொண்டிருக்கிறோம். இது நம்முடைய வருமானம், செலவு, கடன், சேமிப்பு மற்றும் முதலீடு போன்றவற்றில் தீவிரமான பாதிப்பை உருவாக்குகிறது. இதிலிருந்து வெளியேறி சரியான முடிவுகளை எடுக்க, முதலில் நாம் நமக்கும் பணத்துக்கும் இருக்கும் உறவைப் பகுத்தறிவு ரீதியிலானதாக மாற்றி அமைக்க வேண்டும்.

பணம் குறித்து உணர்வுபூர்வமாக சிந்திக்காமல் பகுத்தறிவுடன் அதை ஓர் உபகரணமாக நிலைநிறுத்தி சிந்தித்தால் பண ரீதியான வெற்றியை நிச்சயம் அடைய முடியும். ஏனென்றால், உணர்வு ரீதியாகத் தொடர்பு கொள்வதைத் துண்டித்த உடனேயே பணம் குறித்த பயம் நம்மை விட்டு விலகிச் சென்றுவிடும் என்பதே இதில் உள்ள முக்கியமான பலன்.

பொதுவாக, நாம் அதிகமாகச் சம்பாதித்திருந்தாலும், குறைவாகச் சம்பாதித்தாலும் நாம் சம்பாதித்த பணம் எங்கே போனது என்று தெரியாமல் தவிக்கிறோம். ஆன்லைனில் அதிரடி சலுகைகளைப் பார்த்து, பொருள்களாக வாங்கிக் குவித்துவிட்டு, பணம் எங்கே போனது என்று



கேட்பது கேலிக்கூத்தான விஷயம். நமக்குத் தேவைப்படாத ஒரு பொருளை 30% சலுகையில் வாங்கி என்ன பயன்? அதை வாங்காமல் இருப்பதன்மூலம் நமக்கு 100% இலாபம் கிடைக்கும் இல்லையா?

முழுக்கவனம் செலுத்தி பணம் குறித்த தேர்வுகளைச் செய்யும்போது, எங்கே போனது என் பணமெல்லாம் என்கிற கேள்வி உங்களுடைய மனதில் தோன்றவே தோன்றாது. அவசியம், கனவு (ஆசை), பிடித்தது (வெறுமனே பிடித்தது), தேவை என்கிற நான்குக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை முழுக் கவனத்தைச் செலுத்துவதன் மூலமே நம்மால் உணர முடியும். இந்த வகையில் செயற்பட்டால் மட்டுமே பணம் எங்கேயிருந்து வருகிறது என்பதும் தெரியும், எங்கே போகிறது என்பதும் தெரியும்.

மிகவும் கஷ்டப்பட்டு இவ்வளவு தொகை சேமிக்க வேண்டும் என்று உறுதி செய்து தீர்மானித்துவிட்டீர்கள் எனில், அந்த சேமிப்பைத் தானியங்கி முறையில் (Automated) சேமிக் கும்படி மாற்றிவிடுங்கள். இப்படிச் செய்வதன்மூலம் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய பணம் ஒதுக்குவது தொடங்கி, அவசரத் தேவைக்கான பணத்தை சேமிப்பது வரை எதுவாக இருந்தாலும் எளிதாகச் செய்து முடிக்க முடியும். இப்படி, சில ஆண்டுகளுக்கு விடாமல் செய்து பார்த்தால், அது பெருந்தொகையாக மாறி இருக்கும்.

### இலக்குகளை நிர்ணயிங்கள்…

ஒரு நிதி ஆலோசகரிடம் நீங்கள் சென்றீர்கள் எனில், அவர் கேட்கும் முதல் கேள்வி, உங்களுடைய நிதி இலக்கு என்ன என்பதைத்தானே! சுலபமாக பதில் சொல்லிவிடக் கூடிய கேள்வி இல்லை இது. அதனாலேயே இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டறிய நீங்கள் அவசியம் அதிக நேரம் செலவிட வேண்டும். ஏனென்றால், இலக்குகளே ஒரு விஷயத்தை செய்து முடிக்கும் சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

உங்களுடைய நிதிவளம் மற்றும் அதைப் பெருக்குவது குறித்த விஷயங்களில் எதிலெல்லாம் உங்களுக்குப் புரிதல் சரிவர இல்லாமல் இருக்கிறதோ, அவற்றை எல்லாம் தெரிந்துகொள்வதில் தீவிர ஆர்வம் கொண்டவராக இருங்கள்.

பணம் குறித்த முட்டாள் தனமான கேள்வி எதுவுமே இல்லை. கேள்வி ஏதும் கேட்காமல் இருப்பதுதான் மிகப் பெரிய முட்டாள்தனம். கேள்விகள் அதிகமாக அதிகமாக போலியான திட்டங்களில் இருந்து வெகுவாக நீங்கள் வெளியேறி விடுவீர்கள். கேள்விகளின் மூலம் சரியான புரிதல்கள் ஏற்பட்டுவிட்டால், நம்முடைய பணம் குறித்த அடுத்தவர்களின் திட்டங்கள் எந்த அளவுக்கு நமக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்பதை உங்களால் சுலபத்தில் புரிந்துகொள்ள முடியும்.

### திட்டங்களை நீங்களே தீட்டுங்கள்

இலக்குகளை நிர்ணயிப்பதன் காரணம், நாம் எங்கே செல்ல வேண்டும் என்பதைத் தெளிவாகத் தீர்மானிக்கத்தான். அந்த இலக்கைச் சென்றடைவது என்பது, நாம் போகும் பாதை குறித்த திட்டங்களைத் (நடைமுறைகளை) தீட்டுவதில்தான் இருக்கிறது. இலக்குகளைப் பிரித்து சிறியதாக்கி அதை அடைவதற்கான நடைமுறைகளை உருவாக்குவது எப்படி என்றும், வரி மற்றும் காம்பவுண்டிங் என்ற இரண்டு விஷயங்களைச் சரியாக நிர்வாகம் செய்தால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்னென்ன என்பது பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

பணம் குறித்து பேச நாம் மிகவும் சங்கோஜப்படுகிறோம். அது குறித்து பேச அசௌகர்யம் நம்முடைய மனதில் குடி கொண்டுவிடுகிறது. பணம் குறித்த உணர்வு ரீதியான உறவை ஒழிப்பதுடன், உங்களுடைய வாழ்க்கைத் துணை, நண்பர்கள், பங்காளிகள் போன்றவர்களுடன் பணம் குறித்து உரையாடும் சூழ்நிலைகளை உருவாக்கி, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் உங்களுடைய நிர்வாகியிடம் உங்கள் சம்பள உயர்வு குறித்து பேசுவதும் அடங்கும்.

இந்தப் புத்தகத்தை படித்து முடித்தபின் யாராவது உங்களை 'உங்களால் பணத்தை நன்றாக நிர்வகிக்க முடியுமா?' என்ற கேள்வியைக் கேட்டால் ஏற்கெனவே இருந்ததை விட இப்போது ரொம்பவுமே முன்னேற்றம் அடைந்துள்ளேன் என்று உங்களால் கட்டாயம் சொல்ல முடியும்" என்று கூறி முடிக்கிறார் ஆசிரியர்.

பண நிர்வாகம் பற்றி அறிய நினைப்பவர்களும், பணக்காரர் ஆக வேண்டும் என்கிறவர்களும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது!





ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

# வறட்சியிலிருந்து தென்னையை பாதுகாக்க எளிய வழிமுறைகள்

மழையின்மையால், அடிக்கும் வெய்யிலில் நிலவும் உஷ்ணமும், மனிதர்களை மட்டுமல்லாது, விலங்குகள் மற்றும் விவசாயம் சார்ந்த அனைத்து வகையான பயிர்களையும் கடுமையாகப் பாதிக்கிறது.

தென்னை விவசாயிகள், வறட்சியை எப்படி எதிர்கொண்டு, தென்னை பயிர்களை பராமரிப்பது என்பது தெரிந்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு கீழ்கண்ட முறைகளை கடைபிடிக்கலாம்



**மண் மூடாக்கு**

வறட்சி காலத்தில் பெரிய பிரச்சினையாக இருப்பது, பாசனம் செய்யும் நீர், பயிர்களுக்கு முழுமையாக கிடைக்காமல், வெப்பத்தில் ஆவியாகி விடுவது தான். இதைத் தவிர்க்க, தென்னை மரத்துக்கு பாசனம் செய்யும் பாத்தியில் மேல் மூடாக்கு அமைக்க வேண்டும்.

ஒவ்வொரு பாத்திக்கும், 15 தென்னை ஓலைகள், தேங்காய் மட்டைகள் அல்லது தென்னை நார் கழிவுகளை பரப்பி, சூரிய ஒளி படுவதை தடுப்பதன் மூலம், பாசனம் செய்யும் நீர் ஆவியாவதையும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்து, வறட்சியின் பாதிப்பை குறைக்கலாம்.

தென்னை நார் கழிவுகள் கிடைக்காத பட்சத்தில் வாழை சருகு, வைக்கோல், ஆத்து வாழை, கிளிசரியா இலைகள் போன்றவற்றை மூடாக்காக பயன்படுத்தலாம்.

இதைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று இல்லை. மாறாக மக்கக்கூடிய அனைத்து வகையான நார்க்கழிவுகள், இலை, குலை, தலைச்செடிகள் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

காய்ந்த இலைகள், சருகுகளை விட பச்சையமுள்ள அதாவது குறிப்பாக ஆறு, குளங்களில் இருக்கும் ஆத்து வாழை, கிளி சரியா இலைகள் அல்லது பூவரசம் இலைகள். போன்றவை சிறந்தவையாக இருக்கும்.

காரணம் யூரியா உரத்தில் உள்ள நைட்ரஜன் மேற்குறிப்பிட்ட இந்த இலை தலைகளில் அதிகமாக உள்ளது.

இதனால் தேங்காய்களும் சற்று பெரிதாக இருக்கும்.

இந்த மக்கு மூடாக்கு இப்போது உள்ள பண்ணையாளர்களுக்கு புதிதாக தெரியலாம்.

ஆனால் எமது முன்னோர்கள் பல காலங்களாகத் தங்களுடைய நீண்டகால பயிர்கள் அனைத்திற்கும் இது போன்று தங்களுக்கு இலகுவில் கிடைக்கும் அனைத்து வகையான இயற்கை நார்க் கழிவுகளையே பயன்படுத்திருக்கின்றார்கள்.

நிலத்தில் இவ்வாறு மூடாக்கு அமைப்பதனால் கறையான் படிவதற்கு வாய்ப்பு



"வறட்சி காலத்தில் பெரிய பிரச்சினையாக இருப்பது, பாசனம் செய்யும் நீர், பயிர்களுக்கு முழுமையாக கிடைக்காமல், வெப்பத்தில் ஆவியாகி விடுவது தான். இதைத் தவிர்க்க, தென்னை மரத்துக்குப் பாசனம் செய்யும் பாத்தியில் மேல் மூடாக்கு அமைக்க வேண்டும்."

உள்ளது ஆகையால் அவ்வாறு கறையான் படியும் பட்சத்தில் ஜீவாமிர்தத்தில் சிறிது வேப்பெண்ணெய் மற்றும் சாம்பல் கலந்து தெளிக்கலாம்.

தென்னை மரத்துக்குத் தேவையான நுண்ணுயிர் வளர்ப்பு ஊக்கியாகவும் பயன்படும்.

அல்லது எரிக்கன் இலைகளை நிலத்தில் போட்டுவிட்டு அதற்கு மேல் மூடாக்கு அமைத்தாலும் கறையான் பிடிக்கும் வாய்ப்பு மிக மிக குறைவாக இருக்கும்.

தென்னை மரத்தின் அடிப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று கற்றாழை கன்றுகளை நடுவதன் மூலம் ஈரப்பதத்தை தக்க வைக்கவும் முடியும் அதோடு காய்க்கும் திறனை அதிகரிக்கவும் முடியும் வேர்களைத் தாக்கும் கறையான் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முடியும்.

இவ்வாறு செய்வதனால் கற்றாழையிலிருந்து மற்றுமொரு சிறிய வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

### நீர் மேலாண்மை

மரங்கள் பட்டுப்போவதைத் தடுக்க, சொட்டு நீர்ப் பாசனம் என்றால், ஒரு மரத்திற்கு, ஒரு நாளைக்கு குறைந்தது, 65 லிட்டரும், வாய்க்கால் பாசனம் என்றால், ஒரு மரத்திற்கு, 5 நாட்களுக்கு ஒரு முறை, 400 லிட்டரும் பாசனம் செய்வது நல்லது.

சிறந்த முறையில் மக்கு மூடாக்கு செய்யப்பட்ட தென்னம்பிள்ளைகளுக்கு. வாரத்திற்கு 100 லிட்டர் நீர் பாய்ச்சினால் போதும்.

காரணம் நிலத்தின் ஈரப்பதத்தை ஏழு, எட்டு நாட்கள் வரை தக்க வைத்துக் கொள்ளும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை.

சாதாரணமாக நீர் பாய்ச்சும் தென்னம்பிள்ளைகளின் காய்த்திறனை விட சிறந்த முறையில் மக்கு மூடாக்கு அமைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகளில் வீரியமான குலைத்தாக்கம் எப்போதும் இருந்து கொண்டிருக்கும்.

இந்த பயிருக்கு என்று இல்லாமல் அனைத்து வகையான நீண்ட கால பயிர்களுக்கும். மக்கு மூடாக்கு. நீரின் தேவையினைப் பகுதி அளவில் குறைத்து விடும்.

### இரசாயன உரங்கள் வேண்டாம்

வெயில் தாக்கம் அதிகமுள்ள இந்த மாதங்களில், யூரியா, பொட்டாஷ், MOP உள்ளிட்ட எந்த ரசாயன உரத்தையும் தென்னைகளுக்கு அளிக்க வேண்டாம். அதற்குப் பதில், ஆட்டு எரு, கோழி எரு, மக்கிய உரம், மண்புழு உரங்களை அளிக்கலாம். இயற்கை உயிர் உரங்களை அளிப்பதே இப்போது மட்டுமல்ல எப்போதும் எமக்கும் எமது அடுத்த தலைமுறையினருக்கும் நல்லது.

### குரும்பை உதிர்தல்

பாசனப் பற்றாக்குறை மற்றும். நிலவும் வெப்பத்தின் காரணமாக, பரவலாக காணப்படும் பிரச்சினைகளுள் ஒன்று, குரும்பை உதிர்வது.

அதிகளவில் குரும்பைகள் உதிர்வதால், உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படும். குரும்பை உதிர, வெயில், பாசன பற்றாக்குறை மட்டுமின்றி, நுண்ணூட்ட சத்து அதிலும் குறிப்பாக பேரான் சத்து பற்றாக்குறையும் காரணமாக உள்ளன.

மண்ணின் கார அமிலத்தன்மை: PH தன்மைக்கு ஏற்றவாறு சுண்ணாம்பு சத்து அளவுகளை நிர்ணயித்து இடுதல் அவசியமாகும்.

மேலும் குரும்பை உதிர்வதை கட்டுப்படுத்த இயற்கையான முறையில் மாற்று வழிகளும் உள்ளது.

அதாவது மேற்கூறியது போன்று. மண்ணின் கார அமிலத்தன்மையை சமநிலைப்படுத்தி குரும்பை உதிர்வதை கட்டுப்படுத்தும் சக்தி வீதி ஓரங்களில் உள்ள எருக்கன் செடிகளுக்கு உள்ளது.

ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

நீண்ட காலம் பராமரித்து வளர்க்கும் தென்னையை, வறட்சி பாதிப்புகளில் இருந்து கவனமாக பாதுகாத்தால் மட்டுமே, அடுத்து வரும் ஆண்டுகளில் முழுமையான உற்பத்தியை பெற முடியும்.

இதை கவனத்தில் கொண்டு விவசாயிகள் செயற்பட வேண்டும்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி - 0770239784
WhatsApp: 0769196445




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

> அதிகரித்த வெப்பநிலை காரணமாக கோழிகளில் உடல் எடை குறைதல், இறைச்சியின் தரம் குறைதல், முட்டையின் தரம் குறைதல், முட்டை உற்பத்தி குறைதல், விந்து உற்பத்தி குறைதல் மற்றும் இனப்பெருக்க ஆற்றல் குறைதல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.

# கோடை காலம் கோழிகளின் சோதனை காலம்

கோடைகாலத்தில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் காரணமாக கோழிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. கோழிகளுக்கு உகந்த உச்ச பட்ச சூழல் வெப்பநிலையாக 3 -32 செல்சியஸ் அளவிலேயே காணப்பட வேண்டிய போதும் இலங்கை போன்ற நாடுகளில் வருடம் முழுவதும் அதனைவிட அதிகரித்த வெப்பநிலை காணப்படுவது அண்மைக் காலத்தில் அவதானிக்கபடுகிறது. உலக வெப்பமுறுதலின் தாக்கமாக இதனை கருத முடியும். எனவே கோடை காலம் மட்டுமன்றி வருடம் முழுவதும் கோழிகளை வெப்ப அயர்ச்சியில் இருந்து பாதுகாக்க வேண்டிய தேவை கோழிப் பண்ணையாளர்களுக்கு ஏற்படுகிறது. சராசரியை விட சூழல்வெப்பநிலை அதிகரிக்கும் போது கோழிகள் அசௌகரியத்தை சந்திக்கின்றதோடு அதிகளவில் இறக்கவும் செய்கின்றன.

அதிகரித்த வெப்பநிலை காரணமாக கோழிகளில் உடல் எடை குறைதல், இறைச்சியின் தரம் குறைதல், முட்டையின் தரம் குறைதல், முட்டை உற்பத்தி குறைதல், விந்து உற்பத்தி குறைதல் மற்றும் இனப்பெருக்க ஆற்றல் குறைதல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.

கோழிகளுக்கு எமக்கு இருப்பது போல் வியர்வைச் சுரப்பி கிடையாது. எனவே தமது அலகை [thia] திறந்துதான அதிகளவில் உடல் வெப்பத்தை வெளியேற்றுகின்றன. பொதுவாக ஆரோக்கியமான கோழிப் பண்ணைகளுக்கு அண்மையில் நாம் போகும்போது அவை தமது அலகை திறந்து சுவாசிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இது அந்த பண்ணையின் ஆரோக்கியத்தின் அறிகுறி. நோய்ப்பட்ட பண்ணைகளில் மேற்படி சத்தம் கேட்காது அல்லது சளி கலந்து இழுவையாக கேட்கும். அத்துடன் நோய்



கண்ட கோழி கள் தீவனம் உட்கொள்ளாது சோர்ந்து பக் கமாக ஒதுங்கி இருக்கும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு போன்ற உலர் வலயப் பகுதிகளை பொறுத்தவரை, கோடை காலமாக மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை ஆகஸ்ட் போன்ற மாதங்களை குறிப்பிட முடியும். தென் மாகாணம் வட மேல் மாகாணங்களில் யூன், யூலை ஆகஸ்ட் மாதங்களில் தென் மேல் பருவ காற்று மழை கிடைப்பதால் போன்ற மாதங்கள் ஓரளவு பசுமையானவை. வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஒக்டோபர்,



நவம்பர், டிசம்பர் மாதங்கள் மழை காலமாகவும் ஜனவரி பிப்ரவரி மாதங்கள் குளிர் காலமாகவும் காணப்படும். இந்த காலத்தில் வெப்ப அயர்ச்சி குறைவாகவே கோழிகளுக்கு காணப்படும். எனினும் குளிர் கால பிரச்சினைகள் அந்த காலத்தில் காணப்படும். கோழிப் பண்ணை வளர்ப்பில் மேற்படி மாதங்களின் சூழல் வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு சரியான மேலாண்மை முறையை அந்தந்த பகுதிகளில் கடைப்பிடிக்க வேண்டும். நான் தொடக்கத்தில் இலங்கையில் அண்மைய வருடங்களில் பெரும்பாலும் வருடத்தின் சகல மாதங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படுவதை கருத்தில் கொள்ள வேண்டும்.

### கோழிகளில் வெப்ப அயர்ச்சியின் அறிகுறிகள்

அதிகமாகவும் வேகமாகவும் மூச்சு விடும்



அதிகமாக தண்ணீர் குடிக்கும்.

இறக்கைகளை தளர்வாக நிலத்தில் படர்த்திய படி இருக்கும்.

தலை மற்றும் கொண்டையை தண்ணீரில் அமிழ்த்திய படி இருக்கும்.

குறைவாகவே தீவனம் எடுக்கும்.

எடை குறையும்,வளர்ச்சி வீதமும் குறையும்.

முட்டை உற்பத்தி குறையும்.

சிறிய, தரக்குறைவான, ஓடுகள் நலிவடைந்த தோல் முட்டைகளை இடும்.

ஆள்குளத்தில் தலையை புதைக்கும், கூளத்தை தலையில் போடும்.

தண்ணீராய் கழியும்

கோழிகளில் வெப்ப அயர்ச்சியை குறைக்கும் மேலாண்மை முறைகள்

### தீவன மேலாண்மை

குளிர் காலத்தை விட கோழிகள் 5-10 வீதம் கோடை காலத்தில் தீவனத்தை குறைவாகவே உட்கொள்ளும். இதனால் தேவையான எரிசக்தி , புரதம், அமினோ அமிலங்கள், கனியுப்புகள், விற்றமின்கள் போன்ற ஊட்ட சத்துகள் குறைவாகவே கிடைக்கும். இதனால் கோழிகளின் எடை குறைவதோடு முட்டை உற்பத்தியும் பாதிக்கப்படும். எனவே ஊட்ட சத்துக்களை அதிக அதிகம் உணவில் சேர்க்க வேண்டும் . [ 5-10%]

அனுசேபம் / வளர்சிதை மாற்றத்தின் போது புரத உணவுகள் அதிகளவு வெப்பத்தினை வெளி விடுவதால் இந்த காலத்தில் தீவனத்தில் புரதத்தின் அளவை கணிசமாக குறைக்க வேண்டும்.[ 1-1.5%]

சக்திக்காக தீவனத்தில் சேர்க்கப்படும் சோளம்,அரிசி குருணல்,தவிடு போன்ற காபோஹைதரேட்/ மாப்பொருள் உணவுள் அனுசேபத்தின் போது அதிக வெப்பத்தை வெளிவிடுவதால் அதிக வெப்ப அயர்ச்சியை தரக் கூடியன. இதனால் அதிக வெப்பம் தராத தாவர எண்ணை போன்றவற்றை சேர்த்து [அதிகளவு 5%] அந்த சக்தியை ஈடு செய்யலாம்.

வெப்ப அயர்சியால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் வைட்டமின் மற்றும் செலினியம் சத்துகளை வழங்கலாம். இவை இனப்பெருக்க பிரச்சினைகளை தீர்க்க வல்லன.

முட்டை உற்பத்திக்கு பைகாபனைட் [HCO3] உப பொருள் தேவை. வெப்ப நாட்களில் கோழிகள் அதிக அதிகமாக வாய் மூலம் காபன்டை ஒக்சைட் [Co2] வாயுக்களை வெளி விடுவதால் தேவை



யான் பை காபனேட் கிடைக்காது முட்டை உற்பத்தி குறைவடைவதோடு, தரம் குறைந்த தோல் முட்டைகளை கோழிகள் இடத் தொடங்கும். மேலும் அதிக Co2 வெளியேறுவதால் உடலின் அமில கார சமநிலை பாதிக்கபட்டு காரத் தன்மை அதிகரிப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி கடுமையாக குறைவடையும். இதனை தடுக்க உணவில் NaHco3 சேர்க்கலாம். [ 1000kg உணவுக்கு 1.5-2kg NaHco3]

விற்றமின் போன்றவை வெப்ப அழுத்தத்தை குறைப்பதால் அவற்றை உணவில் வழங்கலாம். விற்றமின் D ஐ வழங்குவதன் மூலம் முட்டை ஓடு சார்ந்த பிரச்சினைகளை குறைக்கலாம். உணவு குறைப்பதை தடுக்க கரும்புச் சாறு போன்றவற்றை பிசைந்து கொடுத்து வழங்கினால் அவற்றின் உணவு உட்கொள்ளுகை அதிகரிக்கும்.

### தண்ணீர் மேலாண்மை

அதிகதிகமாக தண்ணீர் தொட்டிகளை வைக்க வேண்டும்.

சிறிய பண்ணைகளாயின் மண் சட்டிகளில் தண்ணீர் வைக்கலாம். மதிய வேளையில் அதனுள் ஐஸ் கட்டிகளை போட்டு வைக்கலாம்.

தண்ணீர் தொட்டிகளின் வெளி மற்றும் உட்புறத்தை சுண்ணாம்பு பூச்சினால் பூசுவதன் மூலம் அவை குளிர்ச்சியாக காணப்படும். அத்துடன் வெள்ளை நிறம் வெப்பத்தைப் பிரதிபலிக்க கூடியது.

மதிய நேரத்தில் தொட்டிகளில் உள்ள தண்ணீர் விரைவாக வெப்பமாவதால் அடிக்கடி தண்ணீரை மாற்ற வேண்டும். மேலும் தண்ணீரில் குளுக்கோஸ், விற்றமின், கனியுப்புகளை கலந்து வழங்கினால் இழக்கப்படும் மேற்படி சத்துகளை ஈடு செய்யலாம்.

பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கிகள் வெப்பமான நேரங்களில் விரைவாக வெப்பமாவதால் முடிந்தவரை கிணற்றில் இருந்து நேரடியாக தண்ணீரை வழங்குவது சிறப்பானது.

### கொட்டகை மேலாண்மை

கொட்டகையை காணியின் உயரமான மற்றும் காற்றோட்டம் மிக்க இடத்தில் அமைக்க வேண்டும். கொட்டகை நீள போக்கில் கிழக்கு மேற்காக அமைக்கும் போது நேரடியான சூரிய ஒளியின் தாக்கத்தை குறைக்க முடியும்.

கொட்டகைகளை நிழல் மரங்களை கொண்ட இடத்தில் அமைக்கலாம். அல்லாது போனால் நிழல் மரங்களை கொட்டகையை சூழ நடலாம். அத்துடன் பசு





மையான் புற்களையும் நட வேண்டும்.

கொட்டகைகளின் கூரையை வைக்கோல் மற்றும் தென்னோலை கொண்டு அமைத்துக் கொள்ளலாம். அஸ்பெஸ்டாஸ் மற்றும் தகரம் கொண்டு மேயப்படும் கூரைகளை வெள்ளை சுண்ணாம்பு கொண்டு அடிப்பதோடு உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களையும் சுண்ணாம்பு மூலம் அடிக்கலாம். கூரையின் மேல் கொடித் தாவரங்களை கொண்டு படர விடுவதன் மூலம் வெப்பத்தை கணிசமாக குறைக்கலாம். மேலும் நீர் தெளிபான்களை கூரை மேல் அமைத்து வெய்யில் நேரங்களில் அதன் மூலம் குளிர்ந்த நீரை கூரை தெளிக்கலாம்..உட்புற காற்றோட்டத்தையும் வெப்பத்தையும் சரி செய்ய தகுந்த மின் விசிறிகளை பாவிக்க வேண்டும். ஈரமான சாக்குகளை மதிய நேரங்களில் பயன் படுத்துவதன் மூலம் வெப்ப காற்றினை தவிர்க்க முடியும். அண்மைக்காலத்தில் மிகப் பெரிய வர்த்தக கோழிப் பண்ணைகள் வெப்பத்தை வழங்காத செயற்கையான சுவர்களை கோழிப் பண்ணைகளில் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

கோழிப் பண்ணைகளின் சுவரின் அகலம் 25- 30 அடிக்கு அதிகம் இருக்க



கூடாது. அதனை விட அதிகரிக்கும்போது உட்புற காற்றோட்டம் கணிசமாகப் பாதிக்கப்படும். கொட்டகைகளின் நீளத்தை வசதிக்கு ஏற்ப மாற்றலாம். உயரமும் 12-15 அடி அளவில் இருக்கலாம். மேலும் அதிகரிப்பதால் பெரியளவு பயன்கள் கிடைக்காது.

### நோய் மேலாண்மை

கோடை காலத்தில் கோழிகள் தமது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகமாக இழப்பதால் பல நோய்கள் ஏற்படுகின்றன. எனவே கோழிகளுக்கு பொதுவாக ஏற்படும் நோய்களுக்குரிய தடுப்பு மருந்துகளை சரியான வயது பருவத்தில் வழங்குவது சிறப்பானது. ரனிக்கட்[New castle disease] ,கம்போரா [Gamboro - infectious bursal disease] மற்றும் அம்மை [ Fowl pox] நோய்க்குரிய மருந்துகளை வைத்திய ஆலோசனையின் படி சரியான வழிகளில் வழங்க வேண்டும். மேலும் பூச்சி மருந்துகள் மற்றும் இரத்தக் கழிச்சல் [Coccidiosis] நோய்க்குரிய மருந்துகளையும் சரியான விகித்தில் வழங்க வேண்டும். ஏனைய



விலங்குகளை போல் அல்லாது கோழிகள் விரைவாக நோய் தொற்றுக்கு உள்ளாகினால் நூற்றுக் கணக்கில் இறக்கநேரிடும் [High mortality and morbidity ]. எனவே சிறியளவு நோய் அறிகுறிகள் தென்பட்ட உடன் வைத்தியரை நாடுதல் அவசியம். இறந்த கோழிகளை பிரேத பரிசோதனை செய்யவும் வேண்டும். இதன் மூலம் சரியான நோய்களை கண்டறிந்து விரைவாக சிகிச்சையை செய்ய முடியும்.பொதுவாக கோழிகளில் பல நோய்களின் அறிகுறிகள் ஒரே மாதிரி தெரியும் என்பதால் அனுபவம் மிக்க கால்நடை வைத்தியரை அணுகி ஆலோசனையை பெற வேண்டும்.

எனவே கோடை காலத்தில் கோழிகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியை மேற்கூறிய சகல மேலாண்மை முறைகள் மூலம் சரிசெய்து அவற்றின் ஆரோக்கியத்தை பேணுவதன் மூலம் அதிக உற்பத்தியை பெறமுடியும்.

## மாதச் சம்பளக்காரர்கள் பின்பற்ற வேண்டிய .......

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக அவசியத் தேவைக்கு மட்டுமே அதி லிருந்து பணம் எடுக்க வேண்டும். நாம் பணம் சேர்த்து வைத்திருக்கிறோம் என்பதற் காக எடுத்ததுக்கெல்லாம் அந்தப் பணத்தை எடுத்து செலவு செய்யக் கூடாது. இப்படிக் கண்டபடி செலவு செய்வதைத் தடுக்க ஒவ்வொரு முதலீட்டையும் ஏதாவது ஒரு நிதி இலக்குடன் இணையுங்கள். உதாரணமாக, மாதம் ரூ.5,000 முதலீடு செய்துவரும் முதலீட்டை பிள்ளையின் உயர்கல்வி செலவுடன் இணையுங்கள். அப்போதுதான் அந்தத் தேவைக்கு முன், அந்தப் பணத்தை வேறு எந்தத் தேவை களுக்கும் பயன்படுத்த மாட்டீர்கள்.




### முதலீட்டு சூட்சுமங்கள்...

நம்மில் பலர் பங்குச் சந்தை சார்ந்த முதலீட்டுத் திட்டங்களில் பங்குச் சந்தை ஏற்றம் காண ஆரம்பித்து நல்ல வருமானம் கொடுக்க ஆரம்பிக்கும்போதுதான் முதலீடு செய்ய ஆரம்பிப்பார்கள். இது இழப்புக்கு வழிவகுக்கும். சந்தை உச்சத்திலிருந்து திடீரென அதிகமாக இறங்க ஆரம்பித்து விட்டால், இழப்பு அதிகமாக இருக்கும். அது மட்டுமல்ல, பங்குச் சந்தை சார்ந்த முதலீட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முதலீடு செய்துவரும்போதுதான் சராசரியாக அதிக வருமானம் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது. ஆனால், இவ்வாறான முதலீடுகள் தொடர்பில் நன்கு ஆராய்ந்தே செய்ய வேண்டும்.

மேற்கண்ட நான்கு முதலீட்டு விதிமுறைகளைப் பின்பற்றும்போது, முக்கியமான முதலீட்டு சூட்சுமங்களையும் தெரிந்துகொண்டு பின்பற்றினால், சுலபமாகப் பணம் சேர்க்க முடியும்.

# நாங்கள் நினைத்தால் ......

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில் - ஆரம்பத்தில் நமது உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் போது சந்தைப்படுத்தல் என்பது மிகவும் சவாலாக தான் இருந்தது. ஆனால் தற்போது நமது விதைகள் வீரியம் மிக்கவையாகவும் விதைகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் நாங்கள் வழங்கி வருவதால் நமது உற்பத்திகளுக்கு கேள்வி இருக்கிறது.

மூலிகை பொருட்களைப் பொறுத்தவரையில் வெளிநாட்டில் நமது பொருட்களுக்கான கேள்வி அதிகமாக இருக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வசிக்கின்ற நாகலிங்கம் தமிழரசி பார்த்தீபன் அவர்களின் thampi's taunton country Variety மூலமாக பொருட்களை வினியோகிப்பதற்கு இருக்கிறோம். இலங்கை நடைமுறைக்கு ஏற்ப ஏற்றுமதிக்கான அனைத்து பதிவுகளுக்குமான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பதிவுகளை சரியாகப் பெற்றுக் கொள்வதற்கு நமது வர்த்தக சபையினரின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம்.

சந்தைப்படுத்தல் என்பதும் ஒரு கலை தான்... உண்மையுடனும் நிதானமாகவும் செயற்பட்டால் நிச்சயம் வெற்றி பெற முடியும்.

கேள்வி - உங்களது வாடிக்கையாளர்கள் எது கருத்துக்கள் பற்றி சொல்லுங்கள்?

பதில் - மிகச்சிறிய அளவில் ஆரம்பித்த நமது தொழிலுக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பது நமது வாடிக்கையாளர் தான். நம்பகத்தன்மையும் நல்ல தொடர்பாடலும் இருந்துவிட்டால் நமது உற்பத்திகளை வாடிக்கையாளர்களே விளம்பரம் செய்து கொள்வார்கள். நமது உற்பத் திகளின் தரம்பற்றி தெளிவாக அவர்களுக்கு விளக்கு வதோடு சேவைக்கு பின்னான feedback ஒன்றையும் நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். எமது உற்பத்திகளில் வாடிக்கையாளர் களை திருப்திபடுத்தி கொள்வதும் பிரதானமானதாகும்.

கேள்வி - உங்களைப் போல உற்பத்தி களில் ஈடுபடும் தொழில் முனைவோர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று ஆர்வம் அந்த கனவு உங்களுக்கு வந்துவிட்டால் அது உங்களை தூங்க விடக்கூடாது. பல அவமானங்களும் நிராகரிப்புகளும் தான் என்னை ஒரு சுய தொழில் முனைவோர் ஆக்கியது.

ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு முதலீடு இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் இயற்கை நமக்கு தந்திருக்கின்ற வளங்களை பற்றி சிந்தித்து இயற்கையிடமிருந்து நாம் எப்படிப்பட்ட முதலீட்டை பெற்றுக்கொள்ளலாம் என்று சிந்தியுங்கள். அதனோடு சேர்த்து நாங்கள் செலவழிக்கின்ற நேரமும் கடும் உழைப் பும் நேர்மை தன்மையும் எப்போதும் நமக்கு வெற்றியைத் தரும் என்று நம்புவோம். இவற்றை நான் எனது அம்மாவிடம் இருந்து தான் கற்றுக் கொண்டேன். அனைத்திற்கும் இயற்கையும் இறைவனும் துணை இருக்கட்டும்.

"விதைகளே பேராயுதம்"












# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS








### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2023இல் வெளியிடப்பெற்றது.